[illegible]
V3. NO. 14 3 April 1930

SL
ஜ211, N28KN
N30.3.14
189098

148

KALANILAYAM.

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—

No. 11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

OF THE REGISTR...
28 MAY 1930

Vol 3.] 1930 ஞூ ஏப்ரல் மீ 3உ [No. 14.

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader).	261	6.	ஆச்சரிய சூடாமணி (ஜடாயு வதை)	
2.	அப்பர் (சத்தப் பிரமம்)			R. முத்தையர்	272
	E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L.	263	7.	கம்பராமாயணம் (மந்திரப் படலம்)	
3.	தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது)	264		T. N. சேஷாசலம் B. A., B. L.	273
4.	மானத சாத்திரம் (கடத்தை)		8.	இலஞ்சிப் பாவை (வல்லணங்கு வழிபாடு)	
	T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L.	267		T. S. நடராஜபிள்ளை. B A., B.L.	275
5.	குறுந்தொகை (பாட்டு, 1—11)		9	வர்த்தமானம்	279
	K. இராமரத்னம் ஐயர் B. A.	269			

கலாநிலயம்

விஷயத்திற்கேற்ற விளம்பரம்.

139098

"மாணவர்க்குரிய மனவமைப்பினைத் துறந்து நீங்கள், இயக்கங்களுக்கு இரையாகாமலும் மற்றவரை இரையாக்காமலும் காத்தல் வேண்டும்" எனச் சிலவாரங்களுக்குமுன் ஆசிரியர் இராதாகிருஷ்ணன் இலண்டன்மாநகரில் வசித்துவரும் இந்திய மாணவர்களுக்குச் செய்த வொரு பிரசங்கத்தில் வற்புறுத்தினர். நுண்ணிய உணர்வினொடு தத்துவஅறிவும் வாய்ந்த பெருமக்களில் இவர் சிறந்தவர் மிகச் சிலர், என இக்கால உலகம் இவ்வாசிரியரை மதிக்கின்றது. அவரொடும் அவரது உரைகளோடும் பயின்றுள யாவரும் இந் நன்மதிப்பிற் கவர் உரியவரென்பதைச் சிறிதும் ஐயுறார். தர்க்கமுறைகளையும் மானத சாத்திரத்தையும் தன்னுட்கொண்ட தத்துவ நெறிகளை இவர் வழங்கிப் பொழியுஞ் சொற்களைக் கேட்போர், "என்னே இவர் நுண்மதி, என்னே இவர் சொன்மழை, இவர் கல்வியினகலம் என்னே, என்னே!" என அவர் வாய்பார்த்து வியப்பின் சிலைகளாய்ச் சமைந்துநிற்பார். இன்னவர்க்குரியது, கல்வியுலகம், மனத்துலகம், கல்வியாற் பண்பட்டவர் தம் மனத்தினி லுருக்கொளத் திரண்டெழுங் கருத்துலகம். அவ்வுலகின் தன்மைக்கேற்ற மொழியுடன் பழகுங்கால் அவரது மேன்மை புலப்படுகின்றது. அவ்வுலகமே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவுலகம். மற்றவெல்லாம் 'மனிதரால் சிதைவுண்ட சிருஷ்டியின் கோலம். அது இயற்கை, இது செயற்கையின் சிதைவு. ஆதலின், அவ் வியற்கைவுலகின் தத்துவத்தை அள்ளியள்ளி அளிக்குங்காலையிற்றான் ஆசிரியர் இராதாகிருஷ்ணன் போன்றவர்களது மொழிகளில் தூய்மையும் மேன்மையும் தெளிவும் பொருள் வளப் பொலிவுங் காண்கின்றோம். அவர்களே, காலத்தின் கொடுமையால் இம்மண்ணுலக விவகாரங்களைப் பற்றிப் பேசநேருங்கால், உயிரிலாச் சில சொற்றொடர்கள் இடையிடை பயிலாமல் காப்பதற் கியல்கின்றதில்லை. கல்வி அறிவு ஆராய்ச்சி ஒன்றுமில்லாமல் மேடைகண்ட விடமெல்லாம் ஏறிப் பற்பல முழங்கும் ஏனையோ ரளவிற்கே இராதாகிருஷ்ணன்போன்றவர்களும் அரசியற்றுறைகளைப்பற்றி உரையாடும்போது இழிந்துவிட நேர்கின்றது. இங் கொருசொல் அங் கொருசொல் அவர்தம் மேன்மைக் குரியனவாயிருக்கலாம்; எனினும் பொதுவறவில்லாது நிகழ்கின்ற மற்றவைகளைப் பிரித்துக் காட்டுதற்கே அவை உதவுகின்றன. இவ்வுண்மைகள் ஆசிரியர் இராதாகிருஷ்ணன் செய்த பிரசங்கத்தில் நன்கு காணலாம். இவ்வாறு கூறுகின்றாரவர் ஓரிடத்தில்,

> "பொதுஜனக்கல்வி அதிகமாகப் பரவியுள்ள இங்கிலாந்தைப்போலுள்ள ஒரு தேசத்திலுங்கூட, தலைவர்கள் சொல்வதைக்கேட்டே மற்றவர்கள் நடக்கின்றார்க ளென்பதற்கு ஐயமில்லை. ஏதாவது ஒரு கட்சியைச் சேர்கின்றனர். சேர்ந்தபின் கட்சியின் விதிப்படி நடந்துவருகின்றனர். (இனி இவர்களுக்கு மனச்சாக்ஷி என்பது தனியாக இருப்பதில்லை) உன் மனச்சாக்ஷி இப்படி இருக்கவேண்டுமென்று தீர்மானஞ் செய்பவர் தலைவர்களே"

இது புதுமையன்று. யாவரும் அறிந்ததே. தங்களுக்கு அதனால் இடையூறு இல்லாதவரையில் பொது விஷயங்களில் ஒரு கட்சியினர் தம் மனச்சாக்ஷியைத் தலைவர்கையில் ஒப்படைத்திருப்பதும், பிறகு தன் தனிலாபத்தைக் கருதுங்கால் தலைவரையுங் கட்சியையும் போக்கிலே போகவிட்டுச் செல்வதும் தினசரி வர்த்தமானத்தைச் சேர்ந்தன. எனினும், தமக்காகச் சனங்கள் யாதுந் தேர்ந்துகொள்ளாமல் தலைவர் சொற்படி நடத்தலைக் குறித்து இங்ஙனம் கூறுங்கால்

"ஆகையால், இவ்விதம் நடத்துகின்ற சக்தி தலைவர்களது கையில் இருப்பதால் அது ஜனங்களுடைய நன்மைக்கும் ஆகலாம், தீமைக்கும் ஆகலாம். அதை நீ சரியாகச் செய்வாயானால் மேலான நோக்கத்தை முன்தெரிந்து நிகழ்த்தினவனுவாய். அதனையே தப்பாகச் செய்வாயாயின், கேடுகெட்ட பிரசாரம் செய்பவனுவாய்"

என்று காட்டுகின்றார். ஆகையால், பொதுஜனத் தலைவர்களா யிருப்பவர்க்குப் பொறுப்பு அதிகம் உளது என்பதும் யாவருக்கும் வெளிப்படை. மற்று, தலைவராயிருப்பவர் இப்பொறுப்பைச் செவ்விதின் தாங்கித் தீங்கிழைக்காதிருப்பதற்கு அவர் எத்தகையவராதல் வேண்டுமென்பதை இயம்பினரல்லர். "தலைவர்களே, நீங்கள் நல்லவர்களாயிருங்கள்" என்று சாற்றுவதால் யாதுபயன்? அவ்வாறு இல்லாதார் தலைவர் ஆவது இயலாவழியொன்றுளதாயின் அதனைக் கூறினுல் பயனுளது என்னலாம்

இவ்வாசிரியர் இந்தியாவின் தற்கால நிலைமையைப் பற்றிப் பின்வருமாறு பேசியதும் கருதத்தக்கது.

"இந்தியா இப்பொழுது புத்துயிர் (Renaissance) பெற்றுவரலாகின்றது என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கின்றனர். புத்துயிர் பெறுவதென்பதற்குத் தலைகீழாய் மாறுதல் என்னும் பொருளில்லை. கூட்டுறவு வாழ்க்கையிலேனும் (social) அரசியல்துறையிலேனும் (political) பொருளாதார நிலையிலேனும் (economic) மதவிஷயங்களிலேனும் (religious) ஒரு தேசமானது பண்டைய மரபிற்கு (tradition) அடிமையாயிருக்கின்றவரையில் அரும்பெருங் கருமமொன்று இயற்றுதற்கியலாதென்பதை உய்த்துணர்வதே புத்துயிரடைவதென்பதன் பொருளாகும். சுதந்தர வாழ்க்கைக்கு இடையிற்றான் ஒவ்வொரு தேசமும் தன் பெரிய கருமங்களைச் செய்து முடித்திருக்கின்றது. பண்டை இந்தியாவிலும் அப்படியே, கிரீஸ் தேசத்திலும் அப்படியே............ சுயேச்சாசுதந்தரமில்லாமல் பெரியதொன்றும் பெறுதற்கியலாது."

அரும்பருப்புப் பள்ளிக்கூடப் பிள்ளைமுதல் பாலருக்கும் வாயினது விளிம்பில் வந்துநிற்கும் சொற்களிவை. பண்டைக்காலப் பழக்கவழக்கங்களுக்கு அடிமையாயிருப்பதற்கும் தற்காலச் சொற்றொடர்களுக்கு அடிமையாவதற்கும் வேறுபாடு யாதென்று ஆசிரியர் இராதாகிருஷ்ணன்போன்றவர் எடுத்துக்காட்டுவாரென எதிர்பார்த்தோம்; சுதந்தரமுடைய வாழ்க்கை இன்னதென்பதை வரையறுத்து இலக்கணம் செப்புவார் எனச் சிந்தித்தோம்; அவையொன்றும் இயம்பினரலர். மேன்மேலும் இவ்வாறே சில வார்த்தைகளையே சொல்லிக்கொண்டு போகின்றார். மற்றோரிடத்தில்,

"தற்காலக் குழப்பங்கள் தீர்ந்தபின், இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே நிகழ்ந்த வரவு செலவுக் கணக்கைநாம் சாந்தமாகப் பார்ப்போமாயின், சுதந்தரத்தையும், ஒளியின்பால் சுயேச்சையின்பால் மனத்தின் அகலத்தின்பால் அவாவும், இந்தியர்களுக்குவிளைவித்தவொரு பேருபகாரத்தை இங்கிலாந்து செய்திருக்கின்றதென்பது தெரியவரும்"

என்பார். இந்த நன்மைக்கு இந்தியர்கள் நன்றியறிவுடையவர்களாதல் போக்கி, ஆங்கிலேயரை இன்றே அகற்றிவிட வேண்டுமென்பது முறையன்று எனச் செப்புகின்றார். சுதந்தரம் என்பதன் தத்துவத்தை விளக்கியிருந்தால் பயன் பெரிதுடையதா யிருக்கும். இந்தியர் என்ன இருளில் உழல்கின்றன ரென்பதும், ஆங்கிலேயர் என்னவித ஒளியைக்காட்டி இந்தியருக்கு அவ்வொளியின்பால் ஆசையை விளைவித்தனர் என்பதையும் தெரிவிக்காதது ஏனோ! இவை உலகறிந்த விஷயங்களென்ற காரணத்தினுல் விடப்பட்டன என்பதற்கும் இல்லையே. இவ் விதழ்களில் நாம் பல முறை எடுத்துக்காட்டி யிருக்கின்ற வண்ணம், ஆளுக்கு ஆள் இங்கிற்கும் அங்கிற்கும் வாழ்க்கையளவில் வேறுபாடுளதென்று எண்ணுவது அருமையன்றோ!

இதன்பின், வார்த்தையால் யாவும் விளம்பிவிட்டுச் செய்கையில் ஒன்றும் சாதிக்காதிருப்பதே இந்தியாவின் சாபமா யிருக்கின்றதென்று இரங்குகின்றார். இரங்கி, 'முழுவிடுதலைத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டுப் பின் கூத்தாடுவதால் யாது பயன்' எனச் சிலரைப் பரிகசிக்கவும் பரிகசிக்கின்றார்.. யாவரையும் பரிகசிப்பது எளிது. அரசியல் வாதமேடைகளில் வழங்கிவரும் முறைகளுக்குமேல் உயர்ந்தது ஒன்றும் ஆசிரியர் இராதாகிருஷ்ணன் கையாள நினையாதது விந்தையே. சொல்லும்வண்ணம் செய்ய முயலாமையைச் சாபமென்றும், முயன்றக்கால் அதனைக் "கூத்தென்றும்" மாறிமாறி, நெருப்பையுமூட்டி நீரையுங் கொட்டிக் கொண்டிருந்தால் இவ்வார்த்தைகளின் பொருளை எம்மனோர் என்னென் றுணர்வது!

இவ்வாறெல்லாம் ஆசிரியர் இராதாகிருஷ்ணனது பிரசங்கம் அமைந்திருப்பது அவர் குறை அன்று. இவைகளின் உண்மையை அவர் அறிந்திராமையாலன்று. அவரறியா ரெனின் அறிதற்குரியார் வேறு யாருளர். அறிந்திருந்தும் இவைகளைச் சொல்லித்தான் புகழ்சில பெறுதல்கூடும் என்ற எண்ணமும் அவருக்கு இருந்திராது. முன்னரே அவர் பெரும் புகழ் செய்திருக்கின்றார். இவையெலாம், அவர் பிரசங்கத்திற்கென்று எடுத்துக்கொண்ட விஷயத்தின் குறையே யாதல் வேண்டும். இந்திய மாணவர்கள் முன்னிலையில் பேசும்போது தேசாபிமானம் மேலிடச் செப்பவேண்டும் என்று எண்ணினாரோ, யாதோ. அந்த வாய்பாட்டில் வருதற்குரிய வாசகங்களையெல்லாம் வழங்கிவிட்டார். மாணவர்கள் இயக்கங்களுக்கு இரையாகப்படாதென்றும், அவர் மற்றவரை இரையாக்கப்படாதென்றும் வற்புறுத்திய வாக்கியம் பொன்னேபோல் போற்றத்தக்கது. ஆனல் இவ்வறிவுரை பயன்படவேண்டுமே. இதனையும் முன்னரே சொல்லியிருப்பவர் எத்தனையோ பலர்; கேட்டு நடந்தவர் எத்தனை பேர்? "செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும் உத்தியோகத்திற்கும் பித்துப்பிடித்து ஓடுவதை ஒழியின்" என்கின்றார். "மேலான உங்கள் நோக்கத்தை நிறைவேற்றவே முயன்று, மற்றவைகளையெல்லாம் அதற்குக் கீழ்ப்படுத்துங்கள்" என்றும் கூறுகின்றார். சுதந்தரவாழ்க்கையில் விளங்குவதும், நம் இந்தியர்க்கு ஒளியும் விடுதலையும் மன அகற்சியும் வேண்டுமென்ற ஆசை அளித்து வருவதும் ஆனதேயமென்று அவர் கூறிய இங்கிலாந்தில் மாணவர்களும் மற்றுளோர்களும் பணப்பித்துப் பிடித்தோடாமல் மேலான நோக்கங்களை நிறைவேற்றும் நோக்கத்திலேயே தலைநிற்கின்றனரென்பது ஆசிரியர் கருத்தினுள் அமையுமென நாம் நினைக்கவில்லை. எனின், விஷயத்திற்கு ஏற்ற சொற்கள் மற்ற யாவரையும்போல் விளம்பினுல்லது தனக்கே தக்கன ஆசிரியர் இராதாகிருஷ்ணன் பகர்ந்தாரோவென ஐயுறுகின்றோம்.

அப்பர்

8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

6. சத்தப் பிரமம்.

[245-வது பக்கத் தொடர்ச்சி]

(ii) சப்தத்தின் சிறப்பிலக்கணம்.

இனி, நாதமிருந்து ஓசையெழும் விதங்களை ஆராய்வோம்:—

ஆங்கிலேயர் முதலிய மேல்நாட்டுச் சாஸ்திரிகள் உயிரெழுத்தின்றி ஓசையில்லை யென்றும், உயிரெழுத்தே ஓசைவடி வென்றும், மெய்யெழுத்து ஓசையை மாற்றும் ஒருவகைத் துணையென்றும் கொள்வர். இது எத்தன்மைத்தெனின், எழுத்துக்களெல்லாம் செங்கற்களை ஒட்டிஒட்டிச் சுவராக்கும் தன்மையையொக்கும். நமது முன்னோர் கொள்கையோ, ஓசையில் உயிர்ப்புச்சம்பந்தம் முடையனவற்றை உயிரெழுத்தெனவும், உயிர்ப்புச்சம்பந்தம் வேண்டாதனவற்றை மெய்யெழுத்தெனவும் கொண்டதுமன்றி, உயிரெழுத்து ஜனிப்புக்கே மெய்யெழுத்தின் தத்துவங்கள் காரணமென்றும் கொண்டார்:—

ஐவகைப் பூதமு மாய சரீரத்து
மெய்பெற நின்றியங்கு மெய்யெழுத்தால்—துய்ய
ஒருநாடி நின்றியங்கி யுந்துமே லோங்கி
வருமா லெழுத்துடம்பின் வந்து.

சுந்தரரும்,

மெய்யனை மெய்யினின் றுணர்வானை
மெய்யிலாதவர் தங்களுக் கெல்லாம்
பொய்யனைப் புரமூன் றெரித்தானைப்
புனிதனைப் புலித்தோ லுடையானைச்
செய்யனை வெளியதிரு நீற்றிற் றிகழு
மேனியன் மான்மறி யேந்தும்
மைகொள் கண்டனைவாழ் கொளிப்புத்தூர்
மாணிக்கத்தை மறந்தென் னினைக்கேனே

என்று பாடிய பாசுரத்தில் "மெய்" என்னும் பதத்தின் சொல்லலங்காரம் நோக்குக.

சமணமுனியாகிய * பவணந்தியும் "மொழிமுதற் காரணமா மணுத்திரளொலி, எழுத்து; அது முதல், சார்பு, என இருவகைத்து" என்றனர். ஆகையால் மேல்நாட்டு ஓசை ஒலி யிலக்கணம் நமக்கு உடன்பாடாகாது. நாம் மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் முதலெழுத்தாகக் கொள்கிறோம். அவ்வாறு நமது முன்னோர் எடுக்குமிடத்தும், உயிர்ப்பின் இருவகையாகிய இடைகலை பிங்கலை யென்னும் இருவகைப் பிராணவாயுக்களால் மெய்யெழுத்து முன்வந்தே பின்னர் உயிரெழுத்து வெளிவரு மென்பர். இந்நிலையை ஆளாத்தியில் மகர மெய்யினின்று எவ்வுயிரும் ஜனிப்பாகுங்கால் காணலாம்

மகரத்தி னெற்றுற் சுருதி விரவும்
பகருங் குறினெடில்பா ரித்து—நிகரிலாத்
தென்ன தெனவென்று பாடுவரே லாளாத்தி
மன்னுவி சொல்லும் வகை.

சப்தம் பிறக்குங் காலையிலேயே அது இசைமயமாய்ப் பிறக்கின்றது. பிரணவமும் நல்லிசையே நாதமும் அவ்வாறே. அதனின்று பிறக்கும் ஓசையும் இசையே ஆயினும் ஓசையில் மிகவும் இனியவற்றையே நாம் இசைமொழிகளெனக் கொண்டு ஏனையவற்றை இயல்மொழியாயெடுப்பது தொன்றுதொட்டு வரும் வழக்கமாகும். இந்தமரபை அநுசரித்து நல்லிசையில் மிகவும் இலேசான தென்னதென என்னும் இசைகளை யடிப்படையாய் வைத்து மூவகை ஆளாத்தியும் செய்வர். நம்பியாரூரரும்,

தென்ன தெனதேத் தெனவென்று பாடி
சில்பூத முநீருந் திசைதி சையன
பன்னுன் மறைபாடு நீர்பாரூ ருளீர்
படம்பக்கம் கொட்டுந் திருவொற்றி யூரீர்
பண்ணார் மொழியாளை யோர்பங் குடையீர்
படுகாட் டகத்தென்று மோர்பற் றொழியீர்
அண்ணா மலையேனென் றீராரூ ருளீர்
அடிகே ளுமர்காள் செய்வஞ் சுதமே.

என ஆளத்திபரமன் கணங்கள் செய்வதைக் காட்டுவார்.

ஆளத்தியே இசையின் ஆரம்பபாட மென்னலாம். இதன் பெருந்தானம் எட்டு, கிரியைகள் எட்டு. பெருந்தான மெட்டாவன, நெஞ்சம் மிடறு நாக்கு மூக்கு அண்ணுக்கு உதடு பல் தலை யென்னுமிவை. கிரியைகள் எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம், குடிலம் ஒலி உருட்டு தாக்கு என விவை. * இப்பதினுறால் உண்டாக்கப்பட்டனவே நமது பண்களாம். பண்களைக் கருதி வைக்கப்படும் ஆளத்தி, பண்ணாளத்தி யெனப்படும். ஏனையவற்றைக் காட்டாளத்தி, நிறவாளத்தி யென்பர்.

ஆளத்தி செய்யுங்கால் அ, இ, உ, எ, ஒ என்னும் குற்றெழுத்துக்களும், ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும்

* வாயுக்கள் பத்து. பிராணன், அபானன், உதானன், சமானன், கூர்மன், நாகன், கிருகரன், தேவதத்தன், வியானன், தனஞ்செயன் என்பன அவற்றின் தொழில் வருமாறு:—

இடையிங் கலையிரண்டு மேறும் பிராணன்
புடையின் றபானன் மலம்போக்கும்—தடையின்றி
யுண்டன கீழாக்கு முதானன் சமானனெங்கும்
கொண்டெறியு மாறிரதக் கூறு. (1)

கூர்ம னிமைவிழிப்புக் கோணுகன் விக்கிலாம்
பேர்வில் வியானன் பெரிதியக்கும்—போர்மலியுங்
கோபக் கிருகரனுங் கோப்பி லுடம்பெரிப்பு
தேவதத்த னுருமென்று தேர் (2)

ஒழித்த தனஞ்செயன்பே ரோதி லுயிர்போய்க்
கழிந்தாலும் பின்னுடலைக் கட்டி—யழிந்தழிய
மூக்கா லுதிப்பித்து முன்னியவான் மாவின்றிப்
பின்னு வெடித்துவிடும் பேர்த்து. (3)

இசைநுணுக்க முடைய சிகண்டியார்.

* பாவோ டணைத விசையென்பர் பண்ணென்பர்
மேவார் பெருந்தான மெட்டானும் - பாவா
யெடுத்தல் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்ற பார்.

நெட்டெழுத்துக்களும், மகர நகர தகரவொற்றெழுத்துக்களுமே வரப்பெறும். இதன் விதி:—

குன்றாக் குறிலைந்து கோடா நெடிலைந்து
நின்றூர்ந்த மங்கரத் தவ்வொடு—நன்றாக
நீளத்தா லேழு நிதானத்தா னின்றியங்க
வாளத்தி யாமென் றறி.

[குறிப்பு:—இம்மூவகை மெய்யினுள், மவ்வினம் சத்தத்திற் குரியது; நவ்வினம் சாளரத்திற்குரித்து; தவ்வினம் தமிழுக்குரித்து, என்பர் இசைவல்லோர்]

மூலாதாரம் தொடங்கிய எழுத்தின் நாதம் ஆளத்தியாய், பின்னர் இசையென்றும் † பண்ணென்றும் விரியும். இவ்வாறு விரியும் ஆளத்தி மகரத்தின் ஒற்றாலே நாதத்தினைத் தொழில் செய்யுமிடத்துத் தாளத்திற்கோ, அல்லது கூத்துக்கோ வென்று பண்பறிந்து விருத்தி செய்யவேண்டும். ஏனெனில் "பாட்டுக்கும் ஆட்டுக்கும்" * பண்பாய் நிற்பது ஆளத்தியேயாம். அதன் தாளத்துடன் நிகழ்வதை "அச்சு" என்பர். அதன் எழுவாய் குற்றெழுத்தாகும். கூத்துடன் நிகழ்வது "பாரணை". இதன் எழுவாய் நெட்டெழுத்தாகும். இவ்வாறு, சப்த தத்துவமானது நிகழ்வது அண்டாகாரங்களிடையே பரப்பிரமதத்துவம் நிகழ்வதுபோல இருப்பதனால், இக் கலையைச் சத்தப்பிரம மென்பர் மேலோர். பின்வரும், திருநாவுக்கரசுநாயனர் தேவாரமும் இதை ஒருவாறு விளக்குவதைக் காண்க:—

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணு மாகிப்
பிரளயத்திற் கப்பாலோ ரண்ட மாகி
எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்து மாகி
யெழுஞ் சுடரா யெம்மடிக ணின்ற வாறே.
நின்ற திருத்தாண்டகம் 2.

மற்றும் அந்தப் பதிகத்தின் மூன்றாம் பாசுரத்தில் "சொல்லாகி, சொல்லுக்கோர் பொருளுமாகி" என்பர். மனிதருடைய எல்லாச் சிறப்பும் மிடற்றிலே பெரும்பான்மை தியங்குகின்றது. இஃதின்றேல் மனிதன் அஃறிணைப் பொருளே யாவன்:—

ஐத்தானத் தகமிடறு சுற்றி யாங்கே
யகத்தடைந்தா லியாதொன்று மிடுவா ரில்லை
மைத்தானக் கண்மடவார் தங்க ளோடு
மாயமனை வாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்
பைத்தானத் தொண்மதியும் பாம்பு நீரும்
படர்சடைமேல் வைத்துகந்த பண்பன் மேய
நெய்த்தான நெய்த்தான மென்பீ ராகி
னிலாவாப் புலாற்றானை நீக்க லாமே.
பல்வகைத் திருத்தாண்டகம் 2

இது பெற்றதாலேயே, மனிதன் ஞானக்கண்பெற்றிமையோர்பெருமானை, நாத தத்துவத்தில் அநுபவிப்பான். திருநாவுக்கரசும் இதைத் தன் சுவாநுபூதியில் அடியிற்கண்டவாறு வெளியிடுகின்றார்.

கலங்க விருவர்க் கழலாய் நீண்ட
காரணமுங் கண்டேன் கருவாய் நின்று
பலங்க டரித்துகந்த பண்புங் கண்டேன்
பாட லொலியெலாம் கூடக் கண்டேன்
இலங்கைத் தலைவன் சிரங்கள் பத்து
மிறுத்தவனுக் கீந்த பெருமை கண்டேன்
வலங்கைத் தலத்து ளனலுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே.
திருவாய்மூர் - திருத்தாண்டகம் 10.

† பண்ணி னிசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ் சொல்லானாய் போற்றி
யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
விண்ணு நிலனுந் தீயானாய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி
போற்றித் திருத்தாண்டகம் 7.

* பாட்டுக்கு மாட்டுக்கும் பண்பா போற்றி
பல்லூழி யாய படைத்தாய் போற்றி
ஓட்டகத்தே யூணா வுகந்தாய் போற்றி
யுள்குவா ருள்ளத் துறைவாய் போற்றி
காட்டகத்தே யாடன் மகிழ்ந்தாய் போற்றி
கார்மேக மன்ன மிடற்றாய் போற்றி
ஆட்டுவதோர் நாக மசைத்தாய் போற்றி
யலைகெடில வீரட்டத் தான்வாய் போற்றி
போற்றித் திருத்தாண்டகம் 2.

தமிழ்ப் பாடம் 116.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[247-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்

தூதிற்குப் புறப்பட்ட கிருஷ்ணன் அஸ்தினபுரம் போய்ச் சேருகின்றதைப்பற்றிய பாடல்கள் இருபது இடையே விடலாயின.

அன்று தூதுகொண் டிலங்கை தீ விளைத்தவ ரைவர்க்
கின்று தூதுவந் தெயிற்புறத் திறுத்தன ரென்னத்
தன்று தூதுவண் டினமுர றொடையலான் றனக்குச்
சென்று தூதுவ ரியம்பினர் சேவடி வணங்கி. 37.

அத்தினபுரத்திற்கு அயலில் கண்ணன் வந்து தங்கியிருக்கின்றார் என்று தூதுவர் போய்த் துரியோதனனிடந் தெரிவிக்கின்றனர்.

பதவுரை.

தூது-பரவுகின்ற வாசனையாகிய தூதினால் வந்து, துன்று - நெருங்கிய, வண்டு இனம் - வண்டுக் கூட்டங்கள், முரல் - ஒலிக்கப்பெற்ற, தொடையலான் தனக்கு - மாலையையுடைய துரியோதனன் இடத்தில், தூதுவர் - தூதர்கள், சென்று-போய், சேஅடி-சிவந்த பாதங்களை, வணங்கி - வணங்கி,

அன்று - முன்னொருபோது (இராமாவதாரத்தில்) தூதுகொண்டு - (அநுமனை) தூதனாக அனுப்பி, இலங்கை - இலங்கையிலே, தீ விளைத்தவர் - நெருப்பு வைத்தவர், இன்று - இப்பொழுது, ஐவர்க்கு - பாண்டவர்களுக்கு, தூதுவந்து - தானே தூதனாக வந்து, எயில் புறத்து - மதிலுக்கு அப்புறத்தில், இறுத்தனர் - தங்கியிருக்கின்றார், என - என்று, இயம்பினர் - உரைத்தனர்.

விரிவுரை:-துரியோதனனது கொடுமைகளைப்பார்த்து வருவார்க்கெல்லாம், அழிவு அவனுக் கொருநாள் வந்தே தீருமென்பது திண்ணம். அவனது சாரணர்களும் அதனை உணர வல்லவர்களே. கண்ணன் தன் காலடி வைத்ததும் தீயோர் மாயவாழ்வு தொலையத் தலைப்பட்டது என்று தேறினர். ஊக்கமும் பிறந்தது. பிறந்த அவ்வூக்கத்தை ஒளிக்கவும் நினையார்போல் தம் தலைவன்பால் விரைந்துவந்து, முன் தூதனை யனுப்பி இராவணன்தன் தொன்னகரைத் தீக்கிட்டு அழித்த ஒருபெருமான் இன்று தானே உன்னூர்க்கு வந்துளான் எனப்பகர்ந்தனர். வந்திருக்கும் கண்ணன் தான் இன்னதென இயம்புவதன்றி வேறொரு பொருளும் இதனில் இல்லைபோல் தோன்றினும், "முன் ஓர் அரக்கன் கொடுந்தொழில் புரிந்து வாழ்ந்தான். அவனுக்குத் தன் தூதனைக்கொண்டு முன்னறிவு புகட்டினன் இக் கண்ணன்; தொழுந்தியைத் துகிலுரிந்த நீயோ அவ்வரக்கனிலும் கொடியனாதலால் உன்னைத் தண்டிக்கத் தானே வந்திருக்கின்றனன். இனி, தலைகள் தோறும் முடியுடை அரக்கனது வாழ்வு போயவழி வணங்கா வொருமுடி நின்வாழ்வும் ஒழிதற் கிருக்கின்றது" என்னும் உட்கருத்து 'அன்று தூதுகொண்டு இலங்கை தீ விளைத்தவன்' என்ற கருத்தில் அடங்கியிருப்பதால் இது கருத்துடை அடைஅணி யாகும்.

தீயவர் வீழ்வதில் யாவருக்கு மோர் ஊக்கம் உண்டாவது இயற்கையே. அவ்வீழ்ச்சியில் தாமுமே அகப்பட்டுத் தொலையவேண்டி வருமென்பது தெரிந்தாலுங்கூட, அன்னவர் ஊக்கம் குறைவுபடுவதில்லை. போர்தொலைந்துநின்ற இராவணன் ஏவலால் கும்பகர்ணனைத் துயிலெழுப்பச் சென்ற கிங்கரர்கள்

"உறங்கு கின்ற கும்பகன்ன வுங்கண்மாய வாழ்வெல்லாம்
இறங்கு கின்ற தின்றுகா ணெழுந்திரா யெழுந்திராய்
கறங்கு போல விற்பிடித்த காலதூதர் கையிலே
உறங்கு வாயு றங்குவா யினிக்கிடந் துறங்குவாய்"

என்று எழுப்பினர் எனக் கம்பர் கூறுவார். "தூங்கிக் கிடக்கின்ற கும்பகர்ணனே, நீங்கள் இதுகாறும் வாழ்ந்துவந்த மாயவாழ்வெல்லாம் இன்றுமுதல் தொலையத் தலைப்படுகின்றது; எழுந்திரு, எழுந்திரு. வில்லொன்றைக் கையிலேந்திக் காற்றாடியைப்போல் சுழன்று நம்மை அழித்துவருகின்ற காலதூதன் கையிலே நெடுநாள் இனி நீ நீங்காத நித்திரையில் கிடந்து தூங்குவாய், நிச்சயம். இப்பொழுது எழுந்து வா." என்பது இச் செய்யுளின் பொருள். தூங்குகின்றவனிடத்தில் சொன்னவர்களாதலால் அவர் தம் வெறுப்பு வெளிப்படையாய் விளம்பப்பெற்றது. துரியோதனனது தூதர்களோ இங்கு அத்துணை வெள்ளையாய் நேரகே விளம்பத் துணிந்திலர். இவ்வளவே வேறுபாடு.

எம்பெருமான் வந்தனன் என்பதுகேட்ட துரியோதனனது ஏவலால், நகரடங்கலும் அலங்கரிக்கப் பெற்றது.

மின்னு மாமுகிற் பல்லிய விதங்கண் முன்முழங்க
மன்னர் மன்னவ னெழுந்தனன் மாலெதிர் கொள்வா
னென்னை நீயவற் கெதிர்செல்வ தென்றுதன் மருகன்
தன்னை வன்பொடு தகைந்தனன் கொடுமைகூர் சகுனி

கண்ணனை எதிர்கொள்வதற் கெழுந்த துரியோதனனைச் சகுனி தடுக்கின்றான்.

பதவுரை.

மன்னர் மன்னவன் — அரசர்க் கரசனான துரியோதனன், மால்-திருமாலை, எதிர் கொள்வான்-எதிர் கொள்வதற்கு, மின்னும் - மின்னலை வீசுகின்ற, மாமுகில்-பெரிய மேகம் இடிப்பது போல, பல் இயம் விதங்கள்-பலவித வாத்தியங்கள், முன் முழங்க,—முன்னே ஒலிக்க, எழுந்தனன்-புறப்பட்டான். (அப்பொழுது) கொடுமை கூர்-கொடுமை மிகுந்த, சகுனி-சகுனியானவன், அவற்கு-அவனுக்கு, நீ-துரியோதனன் ஆகிய நீ, எதிர் செல்வது என்னை-எதிர்கொண்டழைக்கப்போவது ஏன், என்று-என்று, வன்பொடு, வன்மையோடு, தன் மருகன் தன்னை-தனது மருமானை, தகைந்தனன்-தடுத்தான்.

விரிவுரை: —துரியோதனனும் சகுனியின் சொற்கிணங்கிச் சும்மா இருந்துவிட்டான். ஆயினும் கடவுளை எதிர்கொளச்சென்ற இவனைக்கெடுத்தது கொடிய சகுனியே என்று கூறுவதும் நேரிதன்று. அவன் இயற்கையிலேயே கொடியவனாதலாற்றான், தன்னையேசிறிது மறந்து ஏதோ உள்ளந்தூண்ட உற்றெழுந்தானானாலும், சகுனி 'அரசர்க்கரசனாகிய நீ கடவுளை வழிபடச் செல்வது, உன் மரியாதைக் கேற்றதன்று' எனக் காட்டியதும், இது தக்கதே யென்று அணுவும் விலகாது உடன்பட்டான். தீயவனான சகுனியின் சேர்க்கையால் துரியோதனன்கெட்டனன் என்பது உண்மையுமாயின், முன், மற்றொருமாமன் மாரீசன் புகட்டிய நன்னெறியை அவன் மருகன் இராவணன் கைக்கொண்டிருக்கலாமே.

சீர்வ லம்புரி திகிரிசேர் செங்கையான் தனக்குக்
கார்வ லம்புரி கோயிலுங் காட்சியு மமைத்துப்
போர்வ லம்புரி நிருபரு மிளைஞரும் போற்றத்
தார்வ லம்புரி யவனிருந் தனன்பொலந் தவிசில்

சகுனி தடுக்கவே துரியோதனன் எதிர்கொள்ளச் செல்லாது தன் மனையிலே தங்கிவிட்டான்.

பதவுரை.

சீர்-சிறப்புடைய, வலம்புரி - பாஞ்சசன்யம் என்னும் வலம்புரிச் சங்கும், திகிரி-சக்கரமும், சேர்-கொண்டுள்ள, செம் கையான்தனக்கு - (தாமரை போன்ற) சிவந்த கைகளையுடைய கண்ணபிரானுக்கு, கார் - மேகம், வலம்புரி - வலம்வரும்படி உயர்ந்த, கோயிலும் - அரண்மனையும், காட்சியும் - அலங்காரமும், அமைத்து - ஏற்படுத்தி, போர் வலம் புரி - யுத்தத்தை வல்லமையோடு புரிகின்ற, நிருபரும் - அரசர்களும், இளைஞரும் - தனது தம்பிமார்களும், போற்ற - துதித்து நிற்க, தார்-மாலையை, வலம்புரி - வலப்புறமாகத் தரித்துக்கொண்டிருக்கும், அவன் - துரியோதனன், பொலம் தவிசில் - பொன்னாலாகிய ஆசனத்தில், இருந்தனன் - வீற்றிருந்தான்.

குறிப்பு:—இச்செய்யுளில் 'வலம்புரி' என்பது நான்குமுறை சிறிது வெவ்வேறு பொருள்களில் வந்திருப்பதால் சொல்பின்வருநிலை அணி. முதல்வலம்புரி திருமால் கையிலுள்ள வலம்புரிச்சங்கைக் குறிக்கும், இரண்டாவது, வலம்புரிகின்ற அதாவது பிரதக்ஷணம் செய்கின்ற என்ற பொருளைத் தரும் மூன்றாவது வல்லமையோடு செய்கின்ற என்றாகும் நான்காவது மாலையைப் பூணூல்போல் வலப்பக்கமாகப் போட்டுக்கொண்டிருப்பவன் என்னும் பொருளுக்குரியது

தொல்ப கீரதி மைந்தனுந் துரோணனுஞ் சுதனும்
'வில்வி துரனுங் கிருபனு முதலிய வேந்தர்
மல்கு மூவிரு பத்துநூ றுயிர மகிபர்
செல்வநாயகர்க்கியோசனை யிரண்டெதிர்சென்றார் 40

பதவுரை.

தொல் - பழமையான, பகீரதி - கங்கைக்கு, மைந்தனும் - பிள்ளையாகிய பீஷ்மனும், துரோணனும் - துரோணனும், சுதனும் - அவனது பிள்ளையான அச்வத்தாமனும், வில் விதுரனும் - வில்வல்லானான விதுரனும், கிருபனும் - கிருபனும், முதலிய வேந்தர் - முதலிய அரசர்கள், மல்கு-நெருங்கிய, மூ இருபத்து நூறு ஆயிர மகிபர் - அறுபது லட்சம் வேந்தர்கள், செல்வ நாயகர்க்கு - லக்ஷ்மியின் நாயகனான கண்ணனுக்கு, இரண்டு யோசனை-இரண்டு யோசனை தூரம், எதிர் சென்றனர் - எதிர்கொள்ளச் சென்றனர்.

இலக்கணம்.

இரண்டாம்வேற்றுமை விரியில் எப்பொழுதும் வல்லினம் மிகுமென்றும், தொகையில் பெரும்பாலும் மிகாதென்றும் கூறிப் பிறகு இரண்டாம்வேற்றுமைத் தொகையிலும் மிகுகின்ற சில இடங்கள் இவை யென்று காட்ட வாரம்பித்து, அத்தொகை எழுவாய்த் தொடரோடு மயங்குமாதலால் வல்லினம் மிக வேண்டு மென்பதையும் சென்றவாரப் பாடத்தில் செப்பினோம். இரண்டாம்வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகுகின்ற இடங்கள் பின்னுஞ் சில இன்று காண்போம்:—

2. இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில்,நிலைமொழி வன்றொடர்க் குற்றியலுகரமாக முடியுமானால், வருமொழிமுதலில் வரும் வல்லினமெய் மிகும்.

பாக்கு + கொடுத்தான் = பாக்குக் கொடுத்தான்
உப்பு + தின்றான் = உப்புத் தின்றான்
முத்து + சேர்த்தான் = முத்துச் சேர்த்தான்.
கச்சு + பூண்டாள் = கச்சுப்பூண்டாள்.
பூட்டு + திறந்தான் = பூட்டுத் திறந்தான்.
காற்று + பிடித்தான் = காற்றுப் பிடித்தான்.

குறிப்பு:—வன்றொடரல்லாத மற்றத்தொடர்க் குற்றியலுகரங்களுக்குப்பின் வல்லினம் பொதுவிதிக்கே இணங்கி மிகாது. (உ - ம்) ஆறு கடந்தான், எருது பிடித்தான். பந்து கொடுத்தான். அமிழ்துதின்றான். எஃகு நீட்டினான்.

3. இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் நிலைமொழி, பூ, ஈ ஓ, என்பனபோன்ற ஓரெழுத் தொருமொழி நெடில்களாயிருக்குமாயின் வருமொழி முதலில்வரும் வல்லினமெய் மிகும்.

பூ + பறித்தான் = பூப்பறித்தான்
ஈ + கொன்றான் = ஈக்கொன்றான்
ஓ + செய்தான் = ஓச்செய்தான் (ஓ - மதகு)
ஆ + கட்டினான் = ஆக்கட்டினான்.
தா + தின்றான் = தாத்தின்றான் (தா - மாமிசம்)
கோ + கண்டேன் = கோக்கண்டேன்(கோ-அரசன்)

குறிப்பு:—மை, கை, பை, என ஐகாரத்தோடு சேர்ந்து ஆன உயிர்மெய் ஓரெழுத்தொருமொழிகளுக்குப்பின் வல்லினம் மிகுவதில்லை:—(உ - ம்) கைபிடித்தான், மைதீட்டினாள், பைதிறந்தான். தன்னை உணர்த்தி நிற்கும்போது தவிர ஐகாரத்திற்கு நெடிலிற்குரிய இரண்டுமாத்திரை இல்லாமையால் மற்ற நெடில்களைப்போல் அதன்பின் வல்லினம் மிகுகின்றதில்லை. (ஐ காரத்தின் மாத்திரையைப் பற்றி 2வது வால்யூம், 112வது பக்கத்தில் விளக்கியிருப்பதைக் காண்க) கோழை, அழகு, முதலிய பொருள்களுடைய ஐ என்னும் உயிர் ஓரெழுத்தொரு மொழிக்குப்பின்னும் வலிமிகாது.—ஐகக்கினான் ஐசெய்தான்.

4. இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரிலும், நிலைமொழி இரண்டுகுறில்களால் ஆன சொல்லாயிருப்பதுடன் உகரஉயிரிலும் முடியுமானால் வருமொழிமுதலிலுள்ள வல்லினமெய் மிகும்.

கடு + தின்றான் = கடுத்தின்றான். (கடு - விஷம்)
வடு + பெற்றான் = வடுப்பெற்றான்
உடு + கண்டேன் = உடுக்கண்டேன்(உடு-விண்மீன்).
மது + பருகினான் = மதுப்பருகினான்
உரு + காட்டினான் = உருக்காட்டினான்
கொழு + கண்டான் = கொழுக்கண்டான்

குறிப்பு :—இரண்டு எழுத்துக்களும் குறில்களாக இருக்கவேண்டும். அவைகளில் பின்னது உகரம் ஏறிய உயிர்மெய்யாயும் இருக்கவேண்டும். இவ்விரண்டும் சேர்ந்தால்தான் இரண்டன்தொகையிலும் வலிமிகும். ஆகையால், முதலெழுத்து நெடிலாக இருக்குமானால், காடு கண்டேன், மாது கண்டேன், எனப பொதுவிதியின்படி வலி மிகாமலே புணரும்

இரண்டு குறில்களாலான சொல்லானாலும் அது உகரத்தை யீற்றில் உடையதன்றாயினும் வலி மிகாது. பசிதீர்த்தான், மனைகண்டான், எலிபிடித்தான், கதை சொன்னான், என மிகாமலே புணரும்.

அது இது எனச் சுட்டெழுத்தை முதலிலுடைய சொற்களும், எது என்ற வினாவெழுத்தை முதலிலுடைய சொல்லும், இரண்டு குறில்களால் ஆகி உகரத்தில் முடிகின்ற சொற்களா யிருந்தபோதிலும் அவைகளை நிலைமொழிகளாகவுடைய இரண்டன் தொகையில் வருமொழிமுதல் வல்லினம் மிகாது:—அது கண்டேன், இது சொன்னேன், எது கொடுத்தான்—என இயல்பாகும்.

5. முதலெழுத்துக் குறிலாகவும் பின்னெழுத்து நெடிலாகவும் அமைந்த இரண்டு எழுத்துக்களால் ஆன சொல்லை நிலைமொழியாகவுடைய இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடரில், வருமொழி முதலில் வரும் வல்லினமெய் மிகும்.

விழா + செய்தான் = விழாச் செய்தான்.
நறா + குடித்தான் = நறாக்குடித்தான்
நிலா + கண்டேன் = நிலாக்கண்டேன்
விளா + பறித்தான் = விளாப்பறித்தான்

28 MAY 1930

6. நிலைமொழி இரண்டுநெடில்களாலான சொல்லாயிருக்குமாயின் இரண்டன்தொகையிலும் வருமொழி முதல் வலி மிகும்.

ஆமா + பிடித்தான் = ஆமாப்பிடித்தான்
தாரா + கண்டான் = தாராக்கண்டான்
ஆடூஉ + கண்டேன் = ஆடூஉக்கண்டேன்.
(ஆமா - காட்டுப்பசு) (தாரா-நாரை) (ஆடூஉ - ஆண்)

குறிப்பு:—ஆடூஉ, என்பதில் மூன்றெழுத்துக்கள் இருப்பதுபோல் தோன்றினாலும் ஈற்றிலுள்ள உ, அதற்குமுன் உள்ள ஊகாரம் அளபெடுத்திருக்கின்றதென்றுகாட்ட எழுதப்பட் டிருக்கின்றதே யன்றி அதற்கு ஒலிவடிவு இல்லை. (இவ்விஷயம் விளக்கியிருப்பதை 2வது வால்யூம் 112-ம் பக்கத்திற்காண்க) ஆகையால் ஆடூஉ என்பதை இரண்டுநெடில்களால் அமைந்த சொல் என்றே கொள்ளவேண்டும். இந்தச் சொல்லிலும் மகடூஉ (பெண்) என்னுஞ் சொல்லிலும் ஈற்றுஊகாரம் எப்பொழுதும் அளபெடுத்தே வழங்கி வருவதால் இவைகளை இயற்கை அளபெடைச் சொற்கள் என்று கூறுவர்.

7. நிலைமொழி, ஊகாரத்தை ஈற்றிலுடைய சொல்லாயின், இரண்டன்தொகையிலும் வருமொழிமுதல் வல்லினம் மிகும்.

கொண்மூ + கண்டேன் = கொண்மூக்கண்டேன்
மகடூஉ + கண்டேன் = மகடூஉக்கண்டேன்.
(கொண்மூ - மேகம்) (மகடூஉ - பெண்)

III உயிர் அல்லது யகர ரகர ழகர மெய்களை ஈற்றிலுடைய நிலைமொழியும் வல்லினமெய்யை முதலிலுடைய வருமொழியும் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாய்த் தொடருமாயின், அவை வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தே புணரும். அவ்வாறு மிகாமல்புணர்கின்ற இடமே இல்லை.

யானை + தறி = யானைத்தறி(யானையைக் கட்டுந் தறி)
எலி + பொறி = எலிப்பொறி (எலியைப் பிடிக்கும் பொறி)
தார் + தோள் = தார்த்தோள்(தாரை அணிந்த தோள்)
மிளகு + கடை = மிளகுக்கடை(மிளகைவிற்கும்கடை)
கூழ் + பானை = கூழ்ப்பானை (கூழை வைக்கும் பானை)
நாய் + பாஷாணம் = நாய்ப்பாஷாணம் (நாயைக்கொல்லும்பாஷாணம்)
பந்து + களம் = பந்துக்களம்(பந்தை ஆடுகின்ற களம்)

குறிப்பு:—இரண்டாம்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகையாயிருக்குமானால், வேறொன்றும் பாராமலே வல்லினமெய் மிகவேண்டுமென்று நிச்சயமாய்க் கொண்டு விடலாம்.

ஆகையால், சுருங்கச் சொல்லின் இரண்டாம் வேற்றுமைக் குரிய விதிகள் இவை:—

1 இரண்டன்விரியிலும், உருபும்பயனும் உடன் தொக்க தொகையிலும்,வல்லினம் மிகுந்தே தீரும்.

2. இரண்டாம்வேற்றுமைத் தொகையில்—எழுவாய்த் தொடரோடு மயங்கும் போதும், நிலைமொழி தனிநெடில் இணைக்குறில் குறில்நெடில். அல்லது இணை நெடில்களால் அமைந்திருக்கும்போதும், வன்றொடர்க் குற்றியலுகரத்திலும் ஊகாரத்திலும் முடியும்போதுந் தவிர மற்றவிடங்களில் — வல்லினம் மிகாது.

இவ்விதிகள் மறக்காதிருக்குமாயின் எழுதுங்கால் நேர்கின்றபிழைகளிலொருபகுதியை விலக்கியதாகும்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[251-வது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை (Behaviour)

மெய்ப்பாட்டிற்கும் உள்துடிப்புக்கும் உள்ள வேற்றுமையை நாம் உணர்தல் வேண்டும். ஒன்றை யொன்றாக எண்ணி உலகில் இடருறுவார் பலர். உள்துடிப்பாவது ஒரு தொழிலைச் செய்யவேண்டு மெனப் பதைபதைத்தலாம். காடியைக்காண்கின்றோம்; காட்சிப்பொருளாகக் கண்டதும் நமக்குத் தீமைநேரிடும் என உணர்கின்றோம். ஈதே கேடுநிலை புணர்தலாகும். இக் கேடுநிலையை உணராதவரையில் உள்துடிப்பு எழுவதில்லை. இதனாலன்றோ அடைபட்ட காடிக்குப் பழத்தையும் அடைபடாத காடிக்கு முதுகையும் காட்டி ஓடுகின்றோம். உணர்வின் இன்றியமையாமையை ஈது விளக்குகின்றது. கேடுநிலை உணர்வு பிறந்ததும் ஓடவேண்டும் என மனம் பதைபதைக்கின்றது. இவ்வோட்டத்திற்கு நடுக்கம்வேண்டுவதில்லை, அச்சமும் வேண்டுவதில்லை, ஓடவேண்டும் என்ற உள்துடிப்பே வேண்டுவது. நடுங்குவதற்கு முன் காடியைக்கண்டு ஓடுவதில்லை என்று சொல்ல முடியுமோ? சிலபோது கேடுநிலையை புணர்ந்ததும் அச்சம் எழுவதற்குமுன்னரே ஓடிப் பிழைக்கின்றோம். மெய்ப்பாடு ஒரு மனவெழுச்சி, ஓர் உணர்ச்சிநிலை. உள்துடிப்போ நரம்புகள் பொருத்தமுறும் இயக்கம்; ஓர் இயற்றிநிலை.

அச்சம் எழாதபோதே ஓட்டம் எழுந்தது கண்டோம். சிலபொழுது அச்சம் எழுந்து முடிந்தபின்னரும் அச்சநிலை மறையாமையைக் காண்கிறோம். அது தணியச் சிறிது போதாகின்றது. அப் பின்னிலையில் எப்பொருளைக் கண்டாலும் அஞ்சுவது எளிதாகின்றது. வேலைக்குப் போகின்றான் ஓர் இளைஞன்; களைப்பு மிகுதியினால் அவனுடைய உளி கைதவறிக் கண்ணாடியின்மேல் விழுகின்றது; கண்ணாடி உடையவே வேலைவாங்கும் தொழிற்கூட்டத் தலைவர் எரிந்து விழுகிறார், பலவகையாகத் தொந்தரவு செய்கிறார்; இவனும் வெந்து வெகுள்கின்றான். மாலையானதும் வீடு திரும்புகின்றான் இளைஞன். வெகுட்சி தணிந்தன்றோ இருத்தல் வேண்டும். ஆனால் வெகுட்சிநிலை இன்னும் மாறியபாடில்லை. வீட்டில் வந்ததும் இவன் தாய், இவனது முகவாட்டத்தைக்கண்டு "என்ப

"ஒருவகையாக இருக்கின்றாய்" என்று அன்போடு பரிந்து கேட்கின்றாள். வெகுட்சினிலை மாறாததால் அவள்மேல் எரிந்து வீழ்கின்றான். ஈது பின்னிலை மெய்ப்பாட்டினியல்பு. உருட்டிவிடப்பட்ட ஒருஉருண்டையை உருளும்போதே சிறிது அசைத்தாலும் அது மேலுருண்டு செல்லுமன்றோ? அங்ஙனமே இங்கும் என்க.

உணர்வின் இன்றியமையாமையைக் குறித்தோம். கேடுநிலையை நாம் உணராதபோது நாம் கரடியைக் கண்டு அஞ்சி யோடுவதில்லை. போரொலி கேட்டுத் திடுக்கிடும் குழவி பாம்பினைக் கண்டு அஞ்சுவதில்லை; அதைப் பிடித்து விளையாடப்போகின்றது. பாம்பிற்கு நாள்தோறும் பாலூட்டி அதனோடு விளையாடிவரும் குழந்தையை அப்பாம்போடு ஒரு நாள் கண்ட தாய் வயிறு குழம்புகின்ற கதையை நாமறிவோம் அன்றோ? உணர்வின்றி வெறும் காட்சிப் புலனாலேயே உள்துடிப்போ மெய்ப்பாடோ எழுவதில்லை. கன்றீன்ற ஆவினருகே சென்று கன்றினைத் தூக்கிச்சென்றால் ஆவானது நம்மேல் பாய்கின்றது. வேறு எப்பொருளை எடுத்தாலும் அவ்வாறு நடந்து கொள்வதில்லை. தாய்மை என்ற இயற்கைச் செயனிலை அதனிடத்தே அமைந்துகிடப்பதால் அச்செயனிலைக்கு இடையூறு நேர்ந்தபோது வெகுண்டெழுகின்றது. எனவே ஒவ்வொரு மெய்ப்பாடும் இயற்கைச் செயனிலையை அடிப்படையாகக் கொண்டே எழுகின்றது. தாய்மை இல்லாதபோது கன்றினைத் தூக்கிச் செல்வார்மேல் சீற்றமும் இல்லை. ஆதலின் வெறும் புலனால் (Sensation) மெய்ப்பாடு எழுவதில்லை என்பதாயிற்று. இயற்கைச் செயனிலைக்கேற்றதோர் உணர்வு எழுதல் வேண்டும். பூட்டுக்கேற்ற திறவுகோல் வேண்டும்.

இயற்கைச் செயனிலையில் மெய்ப்பாடும் உணர்வும், உள்துடிப்பும் எவ்வாறு இயைந்திருக்கின்றன? கரடியைக்காண்கிறோம். ஊன்றலும் எதிரூன்றலும்கீழ்வருமாறு விளங்குகின்றன. (1) கரடியின் காட்சி புலனாகின்றது (Sensation). பின்னர் அதன் முகமாகத் திரும்பி அதனைக் காட்சிப் பொருளாய் (Object) கண்டு உணர்கின்றோம் (Perception). கரடி கண்வழியாக நம்மைத் தாக்குகின்றது. ஈதே ஊன்றல் (2) பின்னர் எழுவதே, கேடுநிலை உணர்தல். (3) முன்னாகவே இயைபுண்டு அமைந்துகிடக்கும் நரம்புகள், நாம் ஓடிப்பிழைக்கும் வகையில் பொருந்துறுகின்றன. உள்துடிப்பாம் நரம்புப்பொருத்தம் ஈதே. (4) பின்னர் ஓடுகிறோம். முடிவான எதிரூன்றல் ஈதேயாம். (5) இம் முடிவான எதிரூன்றல் இதுபோதே நிகழாமற்போனும் பண்ணுறுத்தும் எதிரூன்றல்கள் நிகழ்கின்றன. உடனிலை மாறுதல்களும், குறிப்பறிக்கும் இயக்கங்களும் நிகழ்கின்றன. அவற்றைப் புலனுறுகின்றோம். (6) அவற்றை உள்ளக்குறிப்போடு ஒன்றுபடுத்தி ஒற்றுமைக் காட்சியாக உணர்தலே மெய்ப்பாடு. (7) பின்னர் அவற்றால் ஊக்கப்பட்டு ஓடுகின்றோம். ஈது முடிவான எதிரூன்றல் ஆகும். (8) கரடியினின்றும் தப்பிப் பிழைத்ததால் நிலைமாறி விடுகின்றது. கரடி ஊன்றலாக எதிர் இல்லை. முன் எழுந்த இயக்கத்தொடர் முடிவடைகின்றது. ஓர் ஆறுதலும் அமைதியும் உண்டாகின்றன.

இவ்வளவும் கூறினமையால் இயற்கைச் செயற்கும் மெய்ப்பாட்டுக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்குகின்றது. இயற்கைச் செயல் புறநிலையாகும்; முடிவான எதிரூன்றலாகிய மெய்ப்பாடு உள்நிலையாகும்; பண்ணுறுத்தும் எதிரூன்றலாகும். இதனாலன்றோ ஒவ்வோர் இயற்கைச்செயலினும் ஒவ்வொரு மெய்ப்பாடு தோன்றுகின்றது.

பண்டைத்தமிழர், மெய்ப்பாட்டில் உடனிலையும் இன்றியமையாதது என்பதனையும், அவ் வுடல்நிலைகளே அம் மெய்ப்பாடு வெளிப்படுவதற்கு வழியாக நிற்கின்றன என்பதையும் நன்கறிந்திருந்தனர். பேராசிரியர் தொல்காப்பியத்தில் 'மெய்ப்பாட்டியல்' என்பதற்குப் பொருள் கூறுகின்ற பொழுது,

"மெய்ப்பாடென்பது பொருட்பாடு. அஃதாவது உலகத்தார் உள்ளநிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்"

"சுவைக்கப்படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துட் பட்டவழி உள்ளத்து நிகழும் குறிப்பும், குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீரரும்பலும் மெய்ம்மயிர் சிலிர்த்தலும் முதலாக உடம்பின்கண்வரும் வேறுபாடாகிய சத்துவங்களும் என நான்கு. விறலெனினும் சத்துவமெனினும் ஒக்கும். சுவைப்பொருள் என்பன அறுசுவைக்கு முதலாகிய வேம்பும் கடுவும் உப்பும் புளியும் கரும்பும் போல்வன. அவையாமாறு:—நகைச்சுவைக்குப் பொருளாவன, ஆரியர் கூறுந் தமிழும், குருடரும் முடவரும் செல்லும் செலவும், பித்தரும் களியரும் சுற்றத்தாரை இகழ்ந்தாரும்,குழவி கூறும் மழலையும் போல்வன.

"இவற்றைச் சுவைகோடல் என்ப தென்னையெனின், நகையும் அச்சமும் முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவானொருவன் அவற்றுக்கு ஏதுவாகிய பொருள் பிற கண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச் சுவை எனப்படும். வேம்பென்னும் பொருளும் நாவென் பொறியும் தலைப்பெய்தவழி யல்லது கைப்புச்சுவை பிறவாதது போல, அப்பொருள் கண்டவழி யல்லது நகையும் அச்சமும் தோன்றா.

"குறிப்பென்பது கைப்பின் சுவையுணர்வு பிறந்தவழி வெறுப்பு முதலாயின உள்ளநிகழ்ச்சி போல அஞ்சத்தக்கன கண்டவழி அதனைநோக்காது வெறுக்கும் உள்ளநிகழ்ச்சி.

"விறலென்பன, அவ் வுள்ளநிகழ்ச்சி பிறந்தவழி வேம்பு தின்றார்க்குத் தலைநடுங்குவது போலத் தாமே தோன்றும் நடுக்கம் முதலாயின"

எனக் கூறுவது காண்க. அச்சம் முதலாக வரும் மனவெழுச்சியைப் பண்டைமரபின்படியே மெய்ப்பாடு என வழங்குதலே ஏற்புடைத்து. உடனிலை மாறுபாடுகளே விறல் என்பதும் கண்டோம். உணர்வினையும் (Perception) சுவைப்பொருளையும் (Object) முன்னோர் விளக்கியுள்ளமை காண்க.

குறுந்தொகை.

இந்நூல், கடைச்சங்க காலத்துத் தமிழ்மன்னர் வேண்டுகோளின்படி பெரும் புலவரால் தேர்ந்தெடுத்துத் தொகுக்கப்பட்ட பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு எனப்பெயர் பெற்ற தொகைநூல்களுள், எட்டுத்தொகையிலொன்று; இல்லறமாகிய நல்லறம் இனிது நடைபெறும் பொருட்டு ஒருவனுமொருத்தியும் கணவனுமனைவியுமாய் இல்லின்கண் அமர்ந்து ஒரேமனத்தினராய் ஒழுகற்குரிய பேரன்பின் பயனாகிய இன்பப்பகுதியைச் சுவைபடக்கூறும் நானூறு அகவற்பாக்களை உடையது. சிற்றெல்லை நான்கும் பேரெல்லை எட்டுமாக அடிகள்குறைந்த பாக்களான் அமைந்தமையின் இந்நூல் "குறுந்தொகை" என்னும் பெயர்த்தாயிற்று.

இந்நூலைத் தொகுத்தான் பூரிக்கோ என்பான். இதிலடங்கிய பாக்களைப் பாடிய பெரும்புலவர் திப்புத்தோளார் முதல் அம்மூவனார் இறுதியாக இருநூற்றைவர். இதற்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எழுதிய பழைய உரையொன்று உண்டென்று தெரிகிறது; ஆனால் அது கிடைக்கவில்லை.

கடவுள் வாழ்த்து.

பாரதம் பாடிய பெருந்தேவனார்] [பாடாண் திணை

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏமம் வைக லெய்தின்றா லுலகே.

(உரை) தாமரைப்பூவை யொக்கும் அழகிய செந்த பாதங்களையும், பவளத்தைப்போன்ற மேனியினது விளங்கும் காந்தியினையும், குன்றிமணியை நிகர்க்கும் ஆடையினையும், (கிரௌஞ்சம் என்னும்) மலையின் நெஞ்சிடம் பிளவுபடும்படி செலுத்திய அழகிய ஒளிபொருந்திய நீண்ட வேலையும் உடைய அழகிய சேவற் (கோழிக்) கொடியோனாகிய முருகன் காத்தலால், உலகத்தில்வாழும் உயிர்களெல்லாம் பாதுகாப்பை நாளும் பெற்றன.

காமர் - அழகு. குன்றி - குன்றிமணி. உடுக்கை - அரையில் உடுக்கும் ஆடை. ஏமம் - காவல், பாதுகாப்பு. எய்தின்று - எய்திற்று - (எய்து+இன்+து)

அகப்பொருள்நூலாகிய இதற்கு, அகத்திணைக் களவொழுக்கத்திற் சிறந்த கூடலுங் கூடனிமித்தமும் நிகழுமிடமாகிய குறிஞ்சிக்குக் கடவுளான முருகன்வாழ்த்து ஏற்புடைத்தாதல் காண்க.

நூல்

திப்புத்தோளார்] 1 [குறிஞ்சி

தலைவிக்குக் கையுறையாகத் தலைமகன் கொண்டுவந்த செங்காந்தள் மலரைத் தோழி ஏற்காது மறுத்தல்.

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட்டி யானைக்
கழறொடிச் சேஎய், குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

(உரை) போர்க்களம் (குருதியால்) செக்கிற முறும்படி அசுரர்களைக்கொன்று ஆசறவழித்த செங்கோலையொத்த அம்பினையும், (குருதிதோய்ந்து) சிவந்த கொம்புகளையுடைய (பிணிமுகம் என்னும்) யானையையும், கழலும் வீரவளையையும் உடைய முருகவேளை அன்னாய், (இவ்வெற்பன்) குன்றம் குருதியைப்போலச் சிவந்த பூவின் குலைகளையுடைய (செங்) காந்தளை உடையது. (ஆதலால் நீ கொணர்ந்த இது எமக்கு வேண்டா)

கழல்தொடி - கழலும்படி வீரர் கையிலிடும் வளை. சேஎய் - அளபெடை விளியின்கண் வந்தது. காந்தட்டு - காந்தளையுடையது; 'குறுந்தாட்டு' என்றாற் போல.

இறையனார்] 2 [குறிஞ்சி

இயற்கைப்புணர்ச்சியின் இறுதிக்கண் தலைமகன் தலைவியினது நலத்தைப் பாராட்டிப் புகழ்தல்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி,
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ,
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

(உரை). பூந்தேனை ஆராயும் வாழ்க்கையோடுகூடிய அழகிய சிறகையுடைய வண்டே, இச்சமயம் பேசாது நீ (உண்மையாய்) கண்டறிந்ததைச் சொல்; நெருங்குதல் பெருந்திய நட்பினையும், மயிலினது சாயலையும், நெருங்கிய பற்களையும் உடைய இவ்வரிவையின் கூந்தலைப்போல நறுமணமுள்ள பூக்கள் எவையேனும் உளவோ, நீ (தேன் நாடி உண்டு) அறிந்த பூக்களில்.

கொங்கு - தேன்; பூவின் தாதுமாம். மொழிமோ - 'மோ' முன்னிலையிடத்து ஓசை. கெழீஇய - கெழுமிய. எயிறு - முன் தோன்றிய பல்விழுந்து பின்முளைக்கும் பல். அரிவை - எழுவகைப் பருவப்பெண்களில் பத்தொன்பது வயதுக்கு மேற்பட்டு இருபத்தாறு வயதுக்குட்பட்ட பெண்; இங்கு இப்பருவப்பெண்ணைக் குறிக்காது பெண்ணென்னு மாத்திரையாய் நின்றது;இயற்கைப் புணர்ச்சிக் காலத்து தலைமகள் பன்னீராண்டகவையளாதலின். கூந்தலின் - 'இன்' ஒப்புப் பொருளது. பூவே - 'பூக்களுள்' என்று எழுனுருபு விரிக்க.

இவளது கூந்தலின் மணம் பூக்க ளெவற்றினும் இல்லாததோர் புதுமணமாய் இருத்தலின், அது செயற்கைமணமன்று, இயற்கைமணமே என்று தலைவன் வியந்து பாராட்டியதாம்.

இறையனார்,மதுரைச் சோமசுந்தரக்கடவுள்; இப்பாசுரம் தருமிக்கு அவர் இயற்றித் தந்தது. திருவிளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழியளித்த படலத்தில் இவ்வரலாற்றைக் காண்க.

தேவகுலத்தார்] 3 [குறிஞ்சி

களவொழுக்கத்தை நீத்துத் தலைவியைத் தலைமகன் வரைந்துகொள்ளுமாறு தெருட்டலுற்ற தோழி, ஒரு சமயம் தானும் தலைவியுந் தனித்திருந்த இடத்தினருகே தலைமகன் வந்துநிற்றலை அறிந்து, அறியாள்போன்று அவன் செயல் குணங்களைப் பழித்துக்கூறத் தலைமகள் அதனை மறுத்து அவனைத் தாங்கிப் பேசுதல்.

நிலத்தினும் பெரிதே, வானினு முயர்ந்தன்று,
நீரினு மாரள வின்றே, சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

(உரை)மலையின்சாரலின்கண் வலிய கொம்புகளையுடைய குறிஞ்சிப் பூவினிடத்து(த்தேனை)க்கொண்டு பெரியதேனிறாலைச் செய்யும் (மலை) நாடனாகிய தலைமகனுக்கு என்னிடத்துளதாகிய நட்பு நிலத்தினும் பெரிது, வானத்தினும் உயர்ந்தது, கடலினும் அளவிடுதற்கரிய ஆழத்தினை யுடையது.

உயர்ந்தன்று - உயர்ந்தது. நீர் - நீரையுடைய கடல். ஆரளவு - அருமை அளவு, அரிய அளவு. அளவின்று - அளவிற்று, அளவையுடையது. கருங்கோல்; கருமை-வலிமை. பூக்கொண்டு, ஏழாம் வேற்றுமைத் தொகை. தேன்-தேனிறாட்டு. இழைக்குநாடு - இடத்து நிகழு வண்டின் தொழில் இடத்தின்மே லேற்றிக் கூறப்பட்டது. நாடனொடு நட்பு - நாடனது நட்பு; உருபுமயக்கம்.

இறைச்சி:—'சாரற்குறிஞ்சிப்பூக்கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடன்' என்ற பொருளின் குறிப்பால், குறிஞ்சிப் பூக்களிடத்துத் தேனைச் சிறிதுசிறிதாகப் பலநாட் கொண்டு இறுதியில் தேனிறாலை வண்டுகள் இழைப்பதுபோல, இப்பொழுது அருகி என்னுடன் கூடி இன்புறும் தலைமகனது வேட்கை நாளடைவில் முதிர்ந்து இடையறவின்பந் துய்க்கும் நன்மணமாய் முடிவது திண்ணம், என்னிடத்து அவருக்குள்ள அன்பு அளவிடற்கரிய அகற்சி, உயரம், ஆழம் இவற்றை உடையதாதலின்.

காமஞ்சேர் குளத்தார்] 4 [நெய்தல்

தலைமகன் பிரிவிடைத் தலைமகள் அப்பிரிவை யாற்றாளெனக் கவலலுற்ற தோழிக்குத் தலைவி தனதாற்றாமை தோன்றக் கூறியது.

நோமென் னெஞ்சே, நோமென் னெஞ்சே;
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுத னோமென் னெஞ்சே.

(உரை). எனதுள்ளம் வருந்தும்; எனதுள்ளம் வருந்தும். முன்(நம்மிடத்து அன்பு பொருந்திய காதலர்)இப்பொழுது நான் இமைகளைத் தீய்ப்பதை ஒப்ப வெப்பமிக்க கண்ணீரை நிரம்பத் தாங்கி(இங்கே)வருந்திக்கிடக்கும்படி இவ்வாறு அன்புபொருந்தா ரானதைக் குறித்து எனதுள்ளம் வருந்தும்.

நோம் - நோகும். அமைதற்கு - அமையும்படி, அமையுமாறு. ஆகுதல் நோம் - ஆகுதலைநோம், ஆகுதலைக் குறித்து நோம்.

நரிவெரூஉத்தலையார்] 5 [நெய்தல்

தலைவனது பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைவி தனதாற்றாமை புலப்படக் கூறியது.

அதுகொல், தோழி, காம நோயே?
வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை
உடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே.

(உரை). இதுதானோ தோழி, காமநோ யென்பது? தன்னிடத்தே தங்கும் நாரை துயில்கொள்ளும் இனிய இலைகளையுடைய புன்னையின் கிளைமீது(கரையில் விழுந்து) உடைந்துபோகு மியல்பினவாகிய திரைகளின் நீர்த்திவலைகள் (செறிந்து) தோன்றும் தீய நீரையுடைய மெல்லிய கடல்துறைவன் பிரிந்தானாக, என்னுடைய பல்லிதழ்ப் பூவையொத்த மையுண்ட கண்கள் துயில் பொருந்தாவாயின.

'அது' என்பது, பின்வரும் "கண்பாடொல்லா" என்பதைச் சுட்டி நின்றது. இன்னிலை - இன்+நிலை, (இனிய நிலையினையுடைய), இல்+நிலை(இல்லாக அமைந்து நிற்கும்) எனவும் பிரித்துரைக்கலாம். உடைதிரை-கரையை மோதியுடைக்குந் திரை என்றுமாம். தீநீர்-தீக்குணம் என்றுமாம்; இனிது உறங்குங் குருகுகளின் துயிலைக் கெடுக்கும் இயல்பால். புலம்பன் - நெய்தனிலத்தலைமகன்; 'சேர்ப்பன்' என்றும் வழங்குப; புலம்பு - கடல்; சேர்ப்பு - கடற்கரை. பல்லிதழ் - பல இதழ்களோடு கூடிய மலர்—அன்மொழித் தொகை. 'இதழ்' என்பதைச் சினையாகுபெயராய் மலரெனக் கொண்டு, 'பல்லிதழ்' என்பதற்கு மகளிர்கண்ணுக்கு உவமையாகக் கூறப்படும் செந்தாமரை, குவளை, கருநெய்தல், கருவிளை முதலிய பல பூக்களென்று உரைத்தலுமொன்று. பாடு-படுதல், கண்படுதல், நித்திரைகொள்ளல்

பதுமனார்] 6 [நெய்தல்

தலைமகன் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் சேணகன்றவழி ஆற்றளாகிய தலைமகள் தனதாற்றாமை தோன்றத் தோழிக்குச் சொல்லியது.

நள்ளென் றன்றே யாமம்; சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கள்; முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்;
ஓ ஒயான் மன்ற துஞ்சா தேனே.

(உரை). (இரவின் நடு) யாமம் நள்ளென்னும் ஓசையை உடையதாய் இருந்தது; உரையாடலொழிந்து கீழ்மக்களும் மகிழ்வுடன்(துயின்று) அடங்கினர்; பரந்த உலகத்து மேன்மக்களும் வெறுப்பின்றித் துயிலலுற்றனர். அந்தோ, உண்மையாக யானொருத்தியே துயிலப்பெற்றிலேன்.

நள் என்றன்று - நள் என்னும் ஓசையை உடையது; 'நள்' என்பது ஓர் அனுகரண வோசை. மாக்கள் - விலங்குகளைப்போன்ற கீழ்மக்கள்: ("மாவுமாக்களும் ஐயறிவினவே" தொல், பொருள், மரபி,32.) உலகம்-உயர்ந்தோராகிய நன்மக்கள்; "உலக மென்ப துயர்ந்தோர்மாட்டே" (பிங்கலந்தை). முனிவின்று - முனிவின்றி. ஓ - இரக்கக் குறிப் பிடைச்சொல். மன்ற-தெளிவுப்பொருள் தரும் இடைச்சொல்.

பெரும்பதுமனார்] 7 [பாலை

இடைச்சுரத்துத் தலைமகனுடன் தலைமகள் செல்லக்கண்டார் இரங்கிக் கூறியது.

வில்லோன் காலன கழலே; தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே; நல்லோர்
யார்கொல்? அளியர் தாமே யாரியர்;
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே.

(உரை). கழல்கள் இவ்வில்லேந்திய காளையின் காலினுள்ளன; சிலம்புகள் இவ்வளையணிந்த பேதையின் பாதத்தின் மேலிடத்துள்ளன; (இவ்வாறு)கயிற்றில் நாலவிட்டு அசைத்தாடும் பறையைப் போலக் காற்றடித்தலால் அலைவுற்று வாகையின் வெள்ளிய நெற்று ஒலித்தலைச் செய்யும் (இந்த) மூங்கில்கள் நெருங்கிய சுரத்திடைச் செல்லக் கருதியவராகிய நல்லிலக்கணம் முற்றும் வாய்ந்த இவர்கள்தாம் யாவரோ? (இவ்விருவர்தம்) பெற்றோர்களும் இரங்கத்தக்கவர்களே.

அளியர் - நம்மால் அளிக்க (இரங்கப்பட)த்தக்கவர். ஆரியர்-மேலோர்; இருமுதுகுரவர்;தாய் தந்தையர். அழுவம் - பரப்பு; இங்கே, சுடுமணற் பரப்பாகிய பாலைவனம்.

வில்லோன்...கழலே; தொடியோள்...சிலம்பே - யாதொரு பாரமின்றியும் நடத்தலரிய இக் கொடுஞ் சுரத்தில் வில்லையும் கழலையும் சுமந்து இவனும், தொடியையும் சிலம்பையுமேந்தி இவளும் இவ்வாறு வருந்திச் செல்லநேர்ந்ததே என்று பரிந்து கூறியவாறும். மாதர்களின் காலணியாகிய சிலம்பு வதுவைக்காலத்திற் கழற்றுதல் மரபாதலின், இவள் சிலம்பணிந்தபடி ஒரு காளையுடன் செல்லக் கண்டார் இவளை இவன் களவினிற் கொண்டு செல்கின்றானென்று அயிர்த்துக் கூறியவாறுமாம்.

'அளியர் தாமே ஆரியர்' - இவர்களிவ்வாறு பிரிதலாற் பெரிதுங் கவலும் தாய்தந்தையர்களது துயர்நிலை குறித்து இரங்கிக் கூறியதாம்.

ஆலங்குடி வங்கனார்] 8 [மருதம்

தலைமகன் தன்னைப்பழித்துப் புறங்கூறினாளெனக்கேட்ட பரத்தை, அவளுக்குப்பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே.

(உரை). வயற்கரையிலுள்ள மரத்தில் முதிர்ந்துஉதிரும் இனிய கனியைப் பொய்கையினிடத்துள்ள வாளைமீன்கள் கௌவிக்கொள்ளும் மருதநிலத் தலைமகன், எம்மனையில் தங்கியகாலத்து எம்மைப் பெரிதும்புகழ்ந்து பாராட்டி,எம்மினீங்கித் தன்மனையையுற்றகாலத்து,கண்ணாடியினெதிரே நின்று ஒருவன் தன் கையையுங் காலையும் எவ்வாறு தூக்குகின்றானோ அவ்வாறே தனது கைகால்களைத் தூக்கும் அக் கண்ணாடியுள் தோன்றும் அவனது சாயையைப் போல, தனது மகனுக்குத் தாயாகிய மனைக்கிழத்தி விரும்பியவாறே (அவள் குறிப்பின் வழி)ஒழுகுவானாயினான்.

பழனம் - பொய்கை, குளம். ஊரன் - மருதநிலத்துத் தலைமகன். ஆடிப்பாவை-கண்ணாடியிற்றோன்றும் பிரதிபிம்பம். மேவன - மேவுவன, விரும்பியவற்றையெல்லாம்.

இறைச்சி:—வயற்கரை மரத்தினின்றுதிர்ந்த பழத்தைக் குளத்திலுள்ள வாளைகள் கவ்வும் ஊரன் என்ற குறிப்பால் தன்மனையை நீத்து வெளிப்போந்த தலைமகனைப் பரத்தையர் தழுவிக்கோடல் அந்நிலத்தியல்பு என்றதாம். 'புதல்வன் தாய்'என்ற குறிப்பால், தலைமகன் கடுஞ்சூலுற்றுக்கூடற்குரியளல்லாக்கால் அவளை விட்டுப்பிரிந்து பரத்தையர்மாட்டு இன்பந்துய்த்துத் தங்காநின்ற தலைமகன் தன் மனைக்கிழத்தி புதல்வனை ஈன்றதை அவனுக்கு அறிவுறுத்தற்கு வெள்ளணி அணிவித்துச் சேடியைவிடுப்ப, தன்மனைக்கேகிப் பின் மீள்வலென் றுரைத்துப் பரத்தையினீங்கிய தலைமகன் தன் மகனிடத்தார்வத்தால் அவ்வாறுமீளாது தன்னில்லின் கண்ணே தன் மனைவியின் குறிப்பின்வழியே ஒழுகலுற்றுத் தங்கிவிட்டானென்று அதன்காரணத்தைக் கூறியவாறும்.

கயமனார்] 9 [மருதம்

பரத்தைமாட்டுப் பிரிந்து மீண்ட தலைமகன் தோழியைத் தனது காதலியின் ஊடலைத் தணிப்பதற்கு வாயிலாக வேண்ட, தான் அவ்வாறு வாயில்நேர்ந்ததைக் குறிப்பால் அவள் அவனுக்குக் கூறியது.

யாயா கியளே மாஅ யோளே,
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே;
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு னாணிக் கரப்பா டும்மே.

உரை:—(தனது கற்பினால் எவர்க்கும்) தாயெனத் தக்கவளும்,அழகிய மாமை நிறத்தைஉடையவளுமாகிய தலைவி, சூடப் பெறாது, சந்துதெரியாமல் மூடப்பட்ட செப்பிலே தனித்து அடைத்து வைக்கப்பட்ட பூவைப்போல, மேனி (வாடி) அழகு கெடுவாளாயினாள். (ஆதலின்) கரிய (கடற்கரைக்) கழியினிடத்துள்ள பசிய இலைகளின்மீது ஓங்கிய திரண்ட தாளையுடைய நெய்தல்மலர்களும், மீனினங்களும், அக்கழியிடத்துக் கடல்வெள்ளம் (பாய்ந்து) நிறையும் போதெல்லாம், குளத்தில் முழுகும் மகளிரது கண்களையொக்கும் குளிர்ந்த அழகிய நெய்தனிலத்தலைவனது கொடுமையை நம்முன்னே நாணமுற்று (பிறரறியாதபடி) நாம் மறைத்தலைச் செய்வோம்

யாய் - தாய். தலைவியை 'யாய்' என்றது புலத்தற் குரிய காரணம் பல உளவாகவும் அவற்றை மனங்கொள்ளாத சிறப்பை நோக்கி; புதல்வனைப் பெற்றுத் தாயாகிய தலைமகள் என்றுமாம். மாயோள் - மாயவள், மாமைநிறத்தை உடையவள். மடைமாண் - செப்பும் மூடியும் நன்றாய்ப் பொருத்தப்பட்ட. பெய்யாப்பூ - தலையிற் சூட்டிக்கொள்ளாத பூ; வேயாப்பூ. கணைக்கால் - திரண்டதண்டு. துறைவன்- நெய்தனிலத்துத் தலைமகன். கண்ணின் - கண்ணினை; உருபின்றிச் சாரியைமட்டும் நின்றது. கரப்பு ஆடும் -காத்தலைச் செய்வோம்.

ஓரம்போகியார்] 10 [மருதம்

(இதுவும் அது)

யாயா கியளே விழவுமுத லாட்டி,
பயறுபோ லிணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே.

(உரை). மணவிழாவினாலே முதன்மையை அடைபவளும் கற்பிற்சிறந்தவளும் ஆகிய தலைமகள், பயற்றைப்போலப் பசிய பூங்கொத்துகளின் தாது (தம்மீது) படியும்படி உழவர் வளைக்கும் மணங்கமழும் பூக்களையுடைய மெல்லிய கிளைகளையுடைய காஞ்சிமரஞ் செறிந்த மருதநிலத் தலைவனது கொடுமையை (பிறரறியாதவாறு தனக்குள்ளே) மறைத்தனளாதலின், (நான்) நாணுமாறு (இப்பொழுது) அவன் வருவான். (வரின், வாயில்நேர்தலன்றி நான் வேறு செயற்பாலதென்?)

விழவு - மணவிழா. படீஇயர் - படிந்து, படிய, படியுமாறு. காஞ்சி-மருதநிலத்துக்குரியதோர் மரம். கொடுமை- தன்னையன்றிக் களைகண் வேறில்லாத் தலைமகளைத் தனித்துயர்கூரவிட்டுப் பரத்தையினது மனையிடத்துத் தங்கல்.

மாமூலனார்] 11 [பாலை

போர்வயிற் பிரிந்த தலைமகனது பிரிவாற்றாது தலைவி தன்னெஞ்சிற்குக் கூறுவாளாய்த் தோழிகேட்பச் சொல்லியது.

கோடீ ரிலங்குவளை நெகிழ நாடொறும்
பாடில கலுழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவ ணுறைதலு முயங்குவ மாங்கே;
எழுஇனி, வாழியென் னெஞ்சே; முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே.

189098
189098
SM2V, NR8 KN
NBO.3J4

(உரை). சங்குகளை அறுத்துச் செய்த விளங்கும் வளையல்கள் (என் கையினின்றும்) கழுவி விழும்படி நாள்தோறும் துயிலின்றி அழுது கலங்கிய கண்களோடு தனித்து இங்கே உறைதலைக் காட்டிலும், எதிரிலே கஞ்சங் குல்லை மலர் மாலையை அணிந்த வடுகருடைய போர்க்களத்தையுடையதும், வலிய வேலங்காட்டினையுடைய நல்ல நாட்டுக்குமேலிடத்ததும் (வழங்கும்) மொழிவேறானதும் ஆய தேயத்தில் தலைவர் உள்ளாராயினும் அங்கே சென்று நாம் அவரைக் கூடுவோம்; என் நெஞ்சே, நீ என்னுடன் இப்பொழுது எழுவாயாக; அல்லது, அவருடை நாட்டைக்குறித்து நான் போவதற்கேனும் வழிவிடுதலை நினைப்பாயாக.

கோடு - சங்கு. பாடு - படுதல், கண்படுதல், துயிறல். புலம்பி - புலம்புற்று; புலம்பு - தனிமை. உறைதலும் - உறைதலைக் காட்டிலும். ஆங்கு - தலைவன் சென்று தங்கிய நாடு. நல்ல நாடு - தீய நாடு என்னுங் குறிப்பினை உடையது. மொழி பெயர் தேம் - பேசும் பாஷைவேறான அன்னிய நாடு. சூழ்ந்திசின் - 'இசின்' பண்டைக் காலத்து வழங்கியதோர் அசைச்சொல்.

ஆச்சரிய சூடாமணி

[249-வது பக்கத் தொடர்ச்சி.]

4. ஜடாயுவதை அங்கம்

இராம வேஷம்பூண்ட இராவணனும்,
இலக்மண வேஷம்பூண்ட, பாகனும் சீதை
யுடன் தேரில் வருதல்.

இரா:—இலக்மணா! குதிரைகளை விரைவாகவோட்டுக! பரதன் உலகப்பொறுப்பை விரைவில் தவிர்த்திடுக; நம் தாயாரும் நம்மை விரைவாகக் கண்டு களிகூரட்டும். அளியள் இச் சீதையும் தன் நகரடைந்து கிசரருலவும் கொடிய மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்து திரிந்தவித் துயரைப் போக்கிக் கொள்க.

சீதை:—அரசகுமாரா, இல்லை, இல்லை. தவவனத்திலேயே என் மனங் களிப்படைகின்றது.

சூதன்:—(தனக்குள்) இவள் மனது சாந்தமும் பெருந்தன்மையு முடையதாயிருக்கின்றது; ஆதலால் இவள் வஞ்சிக்கத் தக்கவளல்லள்.

சீதை:—(தனக்குள்) இஃதென்ன! இன்மொழியும் கேள்விப்படுகின்றேன்; என்நெஞ்சமும் பதைபதைக்கின்றதே!

ராவ:—(காம பரவசனாக நடித்து) இந்த மானுடமாதைக் குறித்த காமனுடைய அரிய செய்கையை எவ்வாறு தவிர்த்துக்கொள்வேன்.

சூதன்:—(தனக்குள்) ஐயோ! மாரனோ தகவற்றவன். அதனாலன்றோ, இவன் கற்புவாய்ந்த இம்முனிபன்னியைக் கனிந்து பார்க்கிறான். மயிர்க்கூச்செறியுந் தனது கரங்களைப் பன்முறை நீட்டுகின்றான்; நிறங்கெட்டு உதடுகறுக்கும்படி வெப்புயிர்ப் பெறுது வீங்குகின்றான். கபடத்தினால் ஏதோ சொல்கிறான்; ஏதோ செய்கிறான்.

ராவ:—(தனக்குள்) ஆவதாகுக; மெய்தொட்டுப் பயிறலால் விளையுமவ் வின்பத்தை நுகர்வேன்.

சீதை.—(தனக்குள்) என் கணவன் வேறு யாவனோ போல் தோன்றுகின்றானே!

ராவ:—(தனக்குள்) ஐயோ! பழக்கமின்மையால் இவளைத் தீண்டும் வன்மையற்று மாழ்குகின்றேன். காதணிந்த சாமரங்களின் நனி மாசற மதஞ்சொரி ஐராவதத்தின் முகத்திலுந் தடையின்றி மோதும் வலியுடை என் காதலம் இன்று ஓர்முனிவன் மனைவியைத் தொடுவதற்கு இளைப்பதாயிற்று. விந்தையே இது.

சீதை:—(தனக்குள்) இஃதென்ன! அரக்கியைக் கண்டபொழுதிலும் ஆயிரமடங்கு அதிகமாக என் மனது வெம்மை யடைவதேன்!

ராவ:—(தனக்குள்) இவ்வாறு செய்தாலென்! (வெளிப்படை) இத் தவனத்தில் விரதம்பூண்டு நீராடியாடி யுன் வார்குழலும் வேணியாயிற்று; இக்காட்டுக் கொடிமலரன்றிச் சூடி யறியாய். வேகமிகு இந்த இரதத்தின் வேகத்தால் கலைந்தலையும் உன் கூந்தலைத் திருத்துகின்றேன்.

சீதை:—(நாணினளாய்) இளையோ னிங் கயலிருக்கின்றானே (கையால் ராவணன் கையைத் தடுக்கிறாள்; ராவணன் உண்மை உருவ மடைகின்றான்).

சீதை:— (பார்த்து) ஐயகோ, என்செய்வேன். நாயினேன் நாயக னல்லனே இவன்!

ராவ:—மாதராய், அஞ்சேல். இராமனே யான்.

சீதை:—நீ தொலைந்தாய்.

ராவ:—இலக்மணா! இஃதென்ன!

சூதன்:—நீடுவாழ்வீர்! என் சொல்வேன். பிறைமதி நகைக்குநின் கோரவெண் பன்னிரை பிறங்க, இமையமால்வரை மானு நும்மேனி நீருண்டமேகத்திற் கறுத்து, திசைதொறு நோக்கு நும் முகக்குவியல் தோன்ற, காண்போர்க்கு அச்சமொடு இன்பமும் பயப்பதாம் தங்கள் இயற்கை வடிவுதான் இதோ துண்ணெனத் துளங்கிவிட்டதே.

ராவ:—(தன்னையே பார்த்து) ஆ! இப்படி யான் எவ்வா றாயினேன்: மாதே! பயப்படாதே! பயப்படாதே கட்டழகி! யான் உன்னை வெருவரச் செய்வானல்லன். மூண்டெழுங் கோபத்தால் கண்புதைந்த திசையானைகளின் திரண்டுநீண்ட கொம்பின் முனைகளாகிய வச்சிராயுதங்களால் வடுப்பட்டமார்பினைத்தட்டுவேன் என்னோடு இகலி உலகமூன்றினில் தேவரேல் அசுரரேல் உன்னைக் காப்பாற்றவருதற்குத் துணிகின்ற மனத்தினர் எவர்? வீணாக ஏன் வருந்துகின்றாய்?

சீதை:—'நம்பி, காப்பாற்றுக! காப்பாற்றுக! இலக்மணா என்னைக் காவாயோ!

சூதன்:—(தனக்குள்)இனிமேல் இது எனக்கு எதற்கு; என் உருவத்தை எடுத்துக் கொள்கின்றேன். (அவ்வாறே செய்கிறான்.)

சீதை:—ஐயகோ, இவனும் இளையவ னில்லையே! (வாய்விட் டலறுகின்றாள்) ஐயகோ, சக்ரவர்த்தியின் திருக்குமாரா! ஐயகோ! குழந்தாய் இலக்மணா! காப்பாற்றுக, காப்பாற்றுக! அரக்கன் கையிலிருந்து என்னைக் காப்பாற்றுக.

(திரைக்குள்) இதோ இதோ நான் வருகிறேன்.

சூதன்:-நீடுவாழ்வீர். பாருங்கள், பாருங்கள்! ஈட்டி போன்ற மூக்கும், பொற்றூண்போல அழகிய கழுத்தும், உடைந்த பவளம்போன்ற செங்கண்ணும் பொருந்திய ஓர்கழுகு இதோ வருகிறது. அதன் இறகுக் காற்றால் மலர்களை உதிர்க்கும் கிளைகளுடன் கூடிய மரங்கள் அலைபெனப்புரண்டு பின்தொடர்ந்து வழியைக் குறுக்கிட் டடைத்து விழுகின்றன.

சீதை:—எனக்கு யார்புகல்! என்னைக் காப்பவர்யார்.

(திரைக்குள்) தயரதன் நண்பனும் ஜடாயுவுமான யான் காப்பாற்றுவேன். ஏ, ராவணா! உன் தேரை நிறுத்து. அறியாதவர் குற்றத்தை மன்னிப்பேன்; வீரனான ராமன் மனைவியை விட்டுவிடு.

ராவ:—(சிரித்து) என்குற்றத்தை இப்பறவையா மன்னிப்பது! சூத, தேர்ப்பாதையிலிருந்து இவனை நின் கைக்கோலா லடித்து அகற்று. இந்தக் கழுகு உண்மையாக என்னை யறியவில்லை.

(திரைக்குள்)அறிவேன்; அறிவேன். அடே, அரக்கா! நீ கைலைமலை யடியில் மானத்தையும் பெருமையையும் இழந்தாய். கார்த்தவீரியார்ஜுனனது சிறையில்வெகு காலம் அடைபட்டிருந்தாய். வாலியின் வாலால் உன் தோள்கள் தழும்பெழும்படி கட்டுப்பட்டாய். மூவுலகிற்கும் தூமகேது நீ என்பது அறிவேன்.

ராவ:—ஆ - ஆ - ஆ, இக் கழுகு பெரிய வாயாடியாயிருக்கிறதே! இங்கே நீ நில்லடா! என் செய்கையைச் சீதை பார்க்கட்டும். பறக்கும் மலைகளின் சிறகுகளை இந்திரன் அரிந்ததுபோலப் போர்முனையில் செருக்குறச் சுழலும் என்வாளால் இக்கொடியில் உன்னை வெட்டி வீழ்த்துகின்றேன்.

ஜடாயு:—(வந்து) பத்துத்தலை ராவணா! நான் இப்பொழுது க்ஷத்திரியப் பெண்ணான சீதைமுன் என் செய்கின்றேன், பார். ஊழிக்கால மேகம்போற் கறுத்த முகமும் செம்பட்டை மயிருமுடையவாய் காட்டுத்தீயால் திகழும் கருவரைச் சிகரங்களன்ன உன் தலைகளைக் கோபத்துடன் என்மூக்கினாற் சடசடவென்று கொத்தி முறித்துப் பிறகு இரத்தந்தோய்ந்த உன் பத்துத் தலைகளையும் திசைக்கொன்றாய் வீசுவேன்.

சூதன்:—இதோ இதோ! (ஓடி வருகிறான்.)

ராவ:— ஆ! நில்லடா! (இருவரும் போர் செய்கிறார்கள்) இதோ அடிக்கிறேன். (ராவணன் அடிக்கிறான்)

சீதை:- ஐயோ! ஐயோ! (கண்களை மூடிக்கொள்கின்றாள்).

சூதன்:—இக் கழுகைக் கொன்றுவிட்டானே! வெட்டுப் புண்களிலிருந்து பெருகும் இரத்தந் தோய்ந்த சரீரக் களைப்பினால் தொங்குந் தலையுடன் செக்கர்வானம்போற் சிவந்த இப் பறவை வானத்திலிருந்து கீழ் விழுகின்றதே!

சீதை:—"ஊழ்வினை கருணையற்றதே" பாக்கியமற்ற எனக்காக இப்பறவையும் இறந்து சாய்ந்ததே.

ராவ:—சூத, விரைவிற் குதிரைகளை ஓட்டு.

சூதன்:—தலைவ, கட்டளை போலவே. (தனக்குள்) உலக இன்பத்திற்குத் துணையான பொருளுடையதும், மேலுலகிற்கு நன்மையானதும், கேட்க இனிமையானதும், அரச நீதியில் உண்மையுடையதுமான என் வார்த்தையைக் கேட்கின்றானல்லனே இவன். மன்மதனெங்கே, நன்னெறி கடைபிடித்தலெங்கே!

எல்லோரும் போதல்

ஜடாயுவதை அங்கம் முற்றிற்று.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

[255 வது பக்கத் தொடர்ச்சி]

சார்புற வாதந் தன்னிற் றேவனே தோற்றா னம்மா.

தர்க்கத்திற்குந் தம்செயற்கும் இயையாத காரணங்களைத் தயரதபுத்திரர் இருவரு மாறிமாறிக்கூறினாரேனும்,

கவிகுலத் தரச மன்னன்
 கட்டுரை கருத்திற் கொண்டான்
அவியுறு மனத்த னாகி
 யறத்திற னழியச் செய்யான்
புவியிடை யண்ண லென்ப
 தெண்ணினன் பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன்
 சென்னியை யிறைஞ்சிச் சொல்வான்

[குரங்குகளுக்குஅரசனும் கேள்வியறிவு மிகுந்தவனும் ஆன வாலியும், அந்த இலக்ஷ்மணன் கூறிய கட்டுரையை மனத்தில் ஏற்றுக்கொண்டு, இவ்வுலகத்திலும் இராமபிரான் தன் அறத்தின் தன்மை கெடும்படி செய்யமாட்டான் என்பதை யெண்ணித் தணிந்த மனத்தை யுடையவனாகி, இராமனுக்கு முன்னே சென்று தலைவணங்கிப் பின்வருமாறு செப்பினான்]

என வாலி உடன்பட்ட தன்மையும் நோக்கமும் இன்னவென்று முன்னுரை இயம்புவார் கம்பர். இராமன் காட்டிய மாறுபடமுறைக் காரணங்களால் அடங்கினானல்லன் வாலி யென்பதை இச்செய்யுள் குறிக்கின்றது. மெய்யுரை என்னாது கட்டுரை என்றதாலேயே கம்பரும் அதனை வாய்மையென்று கொண்டிலரென்பது வெளியாகலாம். கட்டுரை யென்னாது கட்டுக்கதை என்று சாற்றினும் அமையும். வாலியும் 'அவியுறு மனத்தனாகி' த்தணிந்தானே யன்றித் தெளிவுற மனத்தனாகித் தேர்ந்திலன். கல்வியினும் கேள்வி

சிறந்ததாதலால் இப்பொழுது அது இவனுக்குப் பயன்பட்டது இப்பூவுலகத்திலும் பெருமானிவன் தன்னுடைய அறத்தின் திறத்திற்கே ஏற்றபடிசெய்வான் என்பதை எண்ணினான். எண்ணியதுஞ் சென்னியை இறைஞ்சினான்.

தயரதன் மதலையாய்வந்து மறைந்துநின்ற தன்னை எய்த இவன் மானுடமகன் என்னும் நினைவுநீங்கி, முழுமுதற்கடவுள் என்னும் உணர்வு இப்போது வாலியின் உள்ளத்தில் உருப்பெறலாகின்றது. "என் செய்தேன் பாவியேன், எப்பொருட்கும் எத்தொழிற்கும் இறைவனை இவனை மானுடவிதிகளால் அளந்து நான் வசைகள் ஏவினேனே" எனப்பெரிதும் வருந்தி

தாயெனவுயிர்க்குநல்கித்தருமமுந்தகவுஞ்சால்பு
நீயெனநின்றநம்பிநெறியினிநோக்குநேர்மை
நாயெனநின்றவெம்பானவையறவுணரலாமே
தீயனபொறுத்தியென்றான்சிறியனசிந்தியாதான்

[அற்பபுத்தி யில்லாதவனாகிய வாலி, "தாய்போல் உயிர்களை அளித்து, தருமமும் மேன்மையும் பெருமையும் யாவையும் நீயேயாகி நிற்கின்ற உத்தமனே, உன்னுடைய தன்மையைப் பார்க்கவேண்டிய முறையில் பார்ப்பதற்குரிய நேர்மை நாயனைய என்போன்றவர்களிடத்தில் குற்றமற்றிருக்குமென்று எண்ணலாமோ! ஆகையால், யான் உரைத்தவித் தீயமொழிகளைப் பொறுத்துக்கொள்" என்றான்]

மனிதனென்ற இராமனைப் பாராட்டிய மயக்கம் வாலிக்குத் தெளியலாவதை இணையிலாக் கலைத்திறம் வாய்ந்த கம்பர் மெல்லமெல்லக் காட்டிவருகின்றார். இவ்வுலகியலிலடங்கும் சிறியனசிந்தியாதபெருமனத்தனாகின்றான். தருமம் தகவு சால்பு அனைத்தும் அம்மூர்த்தியே என்பது அறிகின்றான். 'உன்னை நீ யுள்ளவாறு யான் அறிவது எளிதன்று என்ப துணர்தல் நினக் கருமையோ! ஆதலின் யான் ஏசிய புன்மொழிகளைப் பொறுத்தி" யென வேண்டுகின்றான். இக் கருத்தே,

இரந்தனன் பின்னு மெந்தை
யாவது மெண்ண றேற்றாக்
குரங்கெனக் கருதி நாயேன்
கூறிய மனத்துக் கொள்ளேல்
அரந்தைவெம் பிறவி யென்னோய்க்
கருமருந் தனைய வையா
வரந்தரு வள்ள லொன்று
கேளென மறுத்துஞ் சொல்வான்

[மற்றும் இராமபிரானைப் பிரார்த்தித்தவனாய், "என் தந்தையே, எதுவும் ஆராய்ந் தறியமாட்டாத குரங்கே நான் என்பதை மனத்திற்கொண்டு, நாயினேன் கூறியவைகளை உன் திருவுளத்தில் வைத்திடாதே. துன்பத்திற் கிடமாய கொடிய என் பிறவியென்னும் நோய்க்கு அரியதோர் மருந்துபோன்ற ஐயனே, சிறந்த வரங்களைத்தருகின்ற வள்ளலே, யான் உரைப்பதைக் கேள்" என்று பின்னுஞ் சொல்லலானான்]

என்னுஞ் செய்யுளிலும் வற்புறுத்தப் பெறுகின்றது. முதலில், இராமனைப் பெருமகன் (அண்ணல்) என்று எண்ணினான் வாலி ; பிறகு, புருடர்களில் உத்தமன் (நம்பி) என்று அழைத்தனன்; இங்கு, எவ்வுயிரையும் ஈன்ற தந்தையே அவன் ஆவது உணர்ந்தனன். அல்லாமலும், "எந்தை' என்பதை விளியாகக்கொள்ளாது கவிக்கூற்றாகச் 'சொல்வான்' என்பதற்கு வினைமுதலாகக் கொள்ளினும் இப்பாசுரம் நயமிகப் பயந்து நிற்கும். எம்பெருமான் இராமனென்று முணர்வில் ஈடுபடத் தலைப்படுகின்ற வாலியினிடத்தில் கம்பநாட்டாழ்வாரும் ஈடுபடுவாராகி, அடியார்க்கடியாராகின்ற நெறிமுறையில் அக்குரங்கினை 'எந்தை' யெனப் பரிவுடன் புகழ்ந்து தொழுபவராகின்றார்போலும். பிறவி நோய்க்கு மருந்தாவா னிவன் என்னும் நினைவினோடு 'ஐயா' என அழைக்குங்கால் அது 'கடவுள்' என்பதன்றி வேறு பொருள் நல்குவதற்கில்லை.

தீவினை நயந்துசெய்த ஒரு குரங்கு இவ்வாறு மெய்யுணர்வு எய்துதற்குக் கம்பர் வழியொன்று முன்னரே இயற்றி இருக்கின்றார். தன் தடவரைமார்பகம், கதலியின் கனியினைக் கழியச் சேருஞ் சூசியிற் சென்று துளைத்த வாளியைப் பறித்து அதன்கண் பொறித்த நாமத்தை அறிகுவான் நோக்கிய வாலி,

மும்மைசா லுலகுக் கெல்லாம்
மூலமந் திரத்தை முற்றுந்
தம்மையே தமர்க்கு நல்குந்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே யெழுமை நோய்க்கு
மருந்தினை யிராம னென்னுஞ்
செம்மைசேர் நாமந் தன்னைக்
கண்களிற் றெரியக் கண்டான்

[மூன்று உலகங்களுக்கும் மூலமாகிய மந்திரமா யமைந்ததும், அதனை ஜபிப்பவர் தங்களையே தம்மைச்சேர்ந்தவர்க்குக் கொடுத்துவிடும்படி செய்கின்ற ஒருஒப்பற்ற சிறந்த சொல்லாக இருப்பதும், இப்பிறப்பிலேயே எழுபிறப்பின் நோயைத் தீர்க்கும் மருந்தாகத் தானே உதவுவதும் ஆன அந்த இராமனென்னுஞ் செம்மையாகிய நாமத்தைக் கண்களில் தெரியக் கண்டான்]

முன்னர்ச் சம்புவும் தன் உமையின் செவிக்குத் தாரக மந்திரமாய்ச் சாற்றியிருப்பது இவ் விராமநாமம். எழுபிறப்பும் அடியவரை எழுதாப் பெரியபெருமான், எழுதுதற்கெளிய இரண்டெழுத்தை ஓதுவார்க் குண்மையுணர்வு நல்குமோர் பெருந்தகை ஆதலின், கண்வழி இதனைத் தன்இதயத்துள் விதைத்துக்கொண்ட வாலிக்கு நல்லுணர்வு விளைகின்றது. இத் திருநாமந் தங்கித் தழைத்த உள்ளத்தானெதிர், 'எண்ணருளி ஏழைமை துடைத்து எழு மெய்ஞ்ஞானக் கண்ணருள்செய் கண்ணன்'தோன்றுதலும் அன்னான் ஓவியத்தெழுத வொண்ணாத் தனிமுத லுருவத்தை அகத்தி னன்றிப் புறத்திலு மெல்லமெல்ல வாலி காணத் தலைப்பட்டவனாதல்வேண்டும். எனின், அண்ணலை நம்பியாக்கி, நம்பியை எந்தையாக்கி, எந்தையை ஐயனாக்கி, அவ்வையன் யாரென விளம்புவானாய்,

ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனேன்
ஆவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்
மூவர்நீ முதல்வனீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ

[ஏவிய அம்பினால் அடித்து நாயினுங் கடையான அடியேன் ஆவி நீங்குகின்ற தருணத்தில் மெய்யறிவு எனக்குக் கொடுத்தருளினாய். திருமூர்த்திகளும் நீயே, அவர்களுக்கு முதல்வனும் நீயே; பாவமும் நீயே, தருமமும் நீயே; பகையும் நீயே, உறவும் நீயே]

எனத் துதிப்பானாகின்றான். பாவமும் புண்ணியமும் பகையும் உறவும் என முரணுடை இரண்டறநிற்கின்ற ஒருவனிவ் விராமனென்பது உணர்ந்ததால் வாலி அடங்கினானல்லது அவன் கூறிய காரணங்களை மனிததர்மத்தின்படி நேரெனநினைத்தானல்லன். மானுடவிதி

யின்படி, முழுமுதற்கடவுளை மதிக்கும் சிறுமையினைச் சிந்தியாதவனாயினான் என்பதன் பொருளிது. எனவே,

புரமெலா மெரிசெய்தோன்முதலினோர் பொருவிலா
வரமெலா முருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலா முருவியென் னுயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே.

[திரிபுரங்களை யெரித்த சிவபிரான் முதலாயினோர் எனக்களித்த நிகரற்ற வரங்களையெல்லாம் உருவிச்சிதைத்து, எனது பழுதற்ற வலிமையிருந்த மார்பினூடு உருவி, என் உயிரைக் கவர்ந்த உனது அம்பு அல்லாது வேறு தர்மம் என்பது ஒன்று தனியாக உளதோ]

என்னுமளவில், தனிப்பெருங் கடவுள் யாது செய்தனன் அதுவே தருமம் என்பதல்லால், சிறு மாநிடர் அறிந்துள விதிகளால் அவன் செய்கைகளை நிறுத்தளந்து தக்கதிது தகாதிது வெனத் தேர்வதன் பேதைமையைத் தெரிந்து செப்பலாயினான் வாலி.

இச் செவ்வியில், உணர்வினால் மட்டும் வாலி இராமனது பரத்துவத்தை ஊகித்தான் என்பதன்றியும், இவ்வுணர்வு எய்தப்பெற்ற அக் குரக்குவேந்தனுக்கு எம்பெருமான் தன் திருவுருக் காட்சியையும் சாதித்திருக்கவேண்டுமென எண்ணுதற் கிடமுளது. இயம்புகின்றான் வாலி இதற்குப் பின்பாசுரத்தில்,

மாவலச் சூலிபார் வாழ்த்துநர்க் குயர்வர
மோவலற் றுதவினின் னொருதனிப் பெயரியம்
பாவலிப் புடைமையா லாகுமப் பொருளையாந்
தேவநிற் கண்டவெற் கரிதெனோ தேரினே.

[தேவனே, ஆராயுங்கால், மிக்க வலிமையுடைய சூலமேந்திய சிவபிரான் தன்னைத் துதிப்பவர்களுக்கு உயர்ந்த வரங்களைக் குறைவின்றிக் கொடுப்பது உனது ஒப்பற்ற திருநாமத்தை உச்சரிக்கும் பெரிய ஆர்வம் உடைமையினாலாகும். அப்படியிருக்க, அப்பேரிற்குரிய பொருளாகிய உன்னையே நேரிற்கண்ட எனக்கு எதுதான் அரியதாகும்]

பாவமும் தருமமும் தானேயாய தேவனே செய்ததா லச்செயல் ஏற்றதேயெனத் தணிந்திரங்கினான் வாலி என்பது அவன் பின்னுரைத்த துதிமொழிகளால் வெளிப்படை யாவதால் வான்மீக முனிவர் அங்கு வகுக்க முயன்றபடி அரசனுக்கது அறமெனக் கம்பர் கொள்ளவைத்திலர் என்றினி யுணர்வ தெளியதே. இம்முடிவு ஐயமின்றி எய்துமாறு நம் புலமைக் கிறையாய கம்பர், வாலியுடன் வாதத்தில் இராமன் வேறோர் வழியின்றித் தோல்வியுற்று நிற்கச் செய்தனர். நின்ற இவ்வண்ணல், முன் தருமிக்குக் கற்பித்த பாட்டினைக் காக்கும்பொருட்டு நக்கீரனுக்குத் தன் முக்கண்ணுடைய தன்மையைக் காட்டிய கடவுளே போல், தன் திப்பியத் திருவடிவினைத் தோற்றுவிக்கலாயினான். சார்புறச் சூழ்ச்சியெல்லாஞ் செல்லுவதில்லை யென்று தேர்வதற் கிதனின் வேறோர் சிறப்புடைச் சான்று முண்டோ.

இலஞ்சிப் பாவை.

[258-வது பக்கத்தொடர்ச்சி]

11. வல்லணங்கு வழிபாடு.

சிற்றடுக்கை கொஞ்சிவரச் சிறுமணிக ளோலமிடச்
சற்றேனு மிரங்கலையோ சண்டிகையே யுன்மனது.

மாரியம்மன் தாலாட்டு.

உலகெங்கும் இருள்மூடி இரவு அரசாண்டுகொண்டிருந்தது. குன்றிடை நின்று காண்பார்க்கு, நாட்டில் இங்குமங்கு மேற்றிய விளக்குகள் கொள்ளிவாய்ப் பேய்களெனத் தோன்றின. அரவமற்று அடங்கிய ஊரில், கங்குலினிடையே சேய்மைக்கண் ஓநாயும் நரியும் ஊளையிடு மோசையும், களிறுகள் பிளிறு நீடொலியும், அரிமா அரற்று மிடிமுழக்கமு மொழிய வேறோ ரொலியுங் கேட்கவில்லை. இரவில் இரைதேடி யலையும் புலி முதலிய வனம்வாழ் விலங்குகளும், அலைபோன்று பிறர்பொருளைக் காவாட அலைந்த நன்னெறி விலங்கிய மாக்களுமே அவ்விரவில் சஞ்சரித்தன. தங்கள் வாழ்நாட்களை நல்வழியில் கழிக்காது பிறர்க்குச் செய்ய நினைந்த கொடுமைகளே குடிகொண்ட மனத்தாரும், அரச ஆணையையும் அறக் கடவுளின் ஆணையையும் அஞ்சியஞ்சித் துஞ்சுங்கால் தீக்கனாக்கண்டு வெருவியெழுந்த வல்வினையாளருந் தவிர மற்றையோரெல்லா மயர்ந்துறங்கிக் கிடந்தனர்.

இன்னோன்ன நள்ளிரவில், மலையொரு புறமும், ஏரியொரு புறமுமாய்க் கிடக்க, இடையே சென்ற ஓடிப்பாதை யொன்றில் கருணாகரன் காவல் காத்து நின்றான். சேணிடைக் கத்திய ஆந்தை யொன்றை யொழிய அவனுக்கு அச்சமயம் வேறோர் துணையில்லை. செம்மல ரொன்றைக் கையிற்றாங்கி அதன் இதழ்களைத் தன்னை மறந்து ஒவ்வொன்றாய்ப் பிய்த்து எறிந்துகொண்டிருந்த அவன் மனதில் தோற்றிய எண்ணங்கள் பல. "இம்மலர் புதிதாய் அலரும்போது அதிக மணம் பொருந்தியிருக்கும்; மனிதரது விருப்பமும், அச்சமகன்ற அக்காலையே, புதுக்களிபெற்று இன்பமளிக்கும். காலைப் பனிபெற்ற மலரே கண்பறிக்கக் கவின்கொள்ளும்; பிரிவினுற்காதலர் கண்ணீராட்டிய அன்பே அருமைதரும். இவ்வேளை என் மனையாளும் என்னை நினைந்தேங்குவாள்' என்று சொல்லிப் பெருமூச்செறிந்தான். வில்லும் அம்பும் கைநழுவிக் கீழே விழுந்தன. அச்சமயம் அவன் காதுக்கோர் காலடி யரவம் கேட்டதும், துணுக்குற்றுத் தோணியும் வில்லும் கைப்பற்றியெழுந்து,

'யார் அங்கே, நில்! முன் நடந்தால் இறப்பாய்' என்றான்.

'நான்தான் மதனகோபாலன், எனக்கு வழிவிடு,' என்ற மாறுத்தரம் பெயர்ந்தது.

க:—ஓகோ! இவ்வளவு விரைவில் திரும்பிவிட்டீரோ, நெடுவழி சென்றீரென்று எண்ணினேனே!

ம:—ஆம். நான் மணிவண்ணனது ஊர்போய்த் திரும்பியபின், நம்தலைவர் எதிரிகளது எண்ணங்களை அறிந்துவர என்னை ஓர் ஒற்றனாய் அனுப்பினார். அவர் படுத்திருக்கும் இடமெது?

க—உமது பார்வையிலிருந்து, மன்னனது இரகசியங்கள் பலவற்றை யறிந்து வந்திருப்பதாய்த் தெரிகிறது. நமது தலைவர் பனிபடர்ந்த பள்ளத்தாக்கில் படுத்திருப்பார். அவரது தனிமைப் பாயலுக்கு யான் உம்மை அழைத்துச் செல்லுகிறேன், வாரும்." என்று சொல்லி அயலில் உறங்கிய ஆளொருவனை வில்லாற் றட்டியெழுப்பித் தான் வருமளவும் கழுகு போற் கூரிய நோக்குடன் காவல் காக்கவேண்டுமென்று பணித்துச் சென்றான்.

க:—மாற்றாரைப்பற்றி என்ன தெரிந்துகொண்டீர்.

ம:—பலர் பலபடப் பேசுகின்றனர். ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. இரண்டு நாட்களுக்குமுன் முதல்படை பொன்று வெளிக்கிளம்பச் சன்னத்தமாயிருந்துவருகிறது. இதனிடையில் மன்னர் ஓர் விழாக்கொண்டாட ஆயத்தம் செய்கிறார். விரைவிற்றானே, காரிருளென்னக் கருகிய மேகம் உருமென அதிர்ந்து நமது நாட்டின்மீ தெழும். கன்றிய நமது படைவீரர் அதனையொரு பொருட்படுத்தாரெனினும், கருணாகரரே, உமது மனைவிக்குச்சேமம் என்ன செய்யப்போகின்றீர்!

க:—என்ன, இது தெரியாதோ உமக்கு? நமது தாயத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மாதும், பேதையாயினும் பேரிளம் பெண்ணாயினும், மனைவியாயினும் விதவையாயினும், குழந்தையொடும் கிழவரோடுஞ் சேர்ந்து காப்புத்தீவை யடையவேண்டுமென்றும், ஏரியின்மீது யாதொரு படகும் ஓடமும் செலுத்தப்படாமல் கரையிலேயே நின்று அவர்களைக் காத்து நிற்கவேண்டுமென்றும் தலைவர் ஓர் கட்டளை பிறப்பித்தார். அதன்படி அனைவரும் அங்கே போய்ச் சேர்ந்திருக்கின்றனர்.

ம:—நன்று செய்தார்! நம் தலைவரே தாயத்தாருக்குத் தந்தையென்பதை விளக்கிக்காட்டினார். ஆயினும் அவர் ஏன் தன் மெய்க்காப்பாளரை விட்டு நெடுந்தூரம் போய் உறங்குகிறார்?

க:—காத்தன், களப்பலி யூட்டவேண்டுமென்றும் அங்ஙனஞ் செய்தால்தான் நமக்கு வெற்றி கிடைக்குமென்றும் தலைவனிடம் வழக்காடி, கொடும்பூசை செய்ய அவரை ஒருப்படுத்தி, இவ்விடம் அழைத்து வந்து, நமது நாட்டில் சிறந்த கருமேதியை நேற்றுச் சாயந்திரம் பலியிட்டான்.

ம:—ஐயோ பாவம்! நானறிவேன் அவ்வேற்றை. நமது வீரர் பைடணபுரியைக் கொள்ளையாடி நிரை கவர்ந்தநாள், நாம் கொண்ட ஆநிரையில் அதுவே சிறந்தது. கருத்து வளைந்த கொம்புகளும் தீப்பொறியெனச் சிவந்து சினங்காலுங் கண்களும், மாருதத்தை வெல்லும் விரைவுடைக் கால்களும் கொண்டு ஓடியும் தாவியும் அது நமது வீரரை அலைக்கழித்தது மறக்கத்தக்கதன்று. ஆனால் பாதை செங்குத்தானபடியாலும், வீரர் தங்கள் ஈட்டிகளையே தாற்றக்கோலாய்க் கையாண்டதாலும் அது விரைவில் குழந்தைகளும் செலுத்தக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது.

க:— அப் போத்தே பலியாயது. கருத்திருண்டவத னுரிவையும் அக்குன்றிடை, அருவியின் நீர்த்துளிகள் சிவிறியிட்டுப் பரவும் ஓர் பாறையின் மீது விரிக்கப்பட்டிருக்கிறது. அப்பாறையின் ஓரம் அயலுள வேறோர் சமனுடைப் பாறையொன்றின்மேல், அதிர்ந்துவரும் அருவியை யடுத்து, சிந்து சீகரம் சந்தமெனத் தாங்கி, பாறையொடு அருவி அழுதிரங்கு மவ்விடத்தில் காத்தன் பூஜையிட்டுக் குறிகேட்டு நிற்கிறான். தலைவனும் அவனுக்கருகே படுத்துக் கண்வளர்கின்றார். உஸ் - உஸ் அதோபார் பாறைகளின் மேல் தாவி, மரச்செறிவில் நுழைந்துசெல்லும் அவ்வுரு யாது? ஓ! காத்தனே அவன் காண். அவன் பாறைகளைத் தாவித்தாவிச் சென்று தரையிற் கிடந்துறங்கும் போர்வீரர்தம் தொகுதியை உற்றுப்பார்ப்பது, 'வெருவர, வென்றடு விறற்களம் பாடித் துணங்கைக் கூத்தாடும் பேய், போர்க்களம் நோக்கல்போலும், இறந்த மானின் இறைச்சிக்குக் கரையும் காகம்போலு மில்லையா?

ம:—போதும்! போதும்! தங்கள் திருவாயைத் திறக்கவேண்டா. இதை எவராவது கேட்டிருந்தால் உமது உற்பாதப் பேச்சுக்கு உம்மை உடனே வாளால் வீசியிருப்பர். கற்ற வித்தையை இச்சமயந்தானே காட்டவேண்டும். அது கிடக்கட்டும். நமது நாட்டிற்கு நற்குறி நமது தலைவனது உடைவாளேயென்று யான் சொல்வேன். அப்பேய்மகன் பிதற்றுவன கிடக்கட்டும். அதோபார்! இன்னொரு உரு அவனிடம் வந்தது. அது நமது தலைவர் போலும்!

க:—ஆம், அதற் கையமில்லை; உடுக்கையும்முழங்குகின்றது. மறுபடியும் தெய்வம் வருகிறதோ யாதோ!

ம:—ஆயின் முன்னொருமுறை வந்ததோ?

க:—ஆம்; பரசுராமன்மேல் தெய்வம்வந் தாடிற்று

ம.—அவன் என்றும் பித்துப்பிடித்தவன். பூதம் பேய் என்றால் பிரமைகொள்பவன். பக்குவமில்லாப் பதடி. ஏதாகிலும் பிதற்றிக்கொண்டே யிருப்பான். என்ன சொன்னான்?

க:—ஒன்றும் பேசிலன் விம்மிவிம்மி யழுதான்.

ம:—சே சே. என்ன ஐயா நீர்! தூர்க்குறியொழிய உமக்கொன்றும் மனதில் நிற்பதே யில்லைபோலும்.

க:-நடந்ததைச் சொன்னேன். அந்திமுதல் அவன் அப்படியே மயக்கத்தில் இருக்கிறான். அதனால்தான் அவனைத் தனியே யழைத்துச்சென்று அப்பாறையினருகே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ம:—கஞ்சாவை அவனுக்குப் பலமாகக் கொடுத்துவிட்டிருப்பான் காத்தன்.

க:—இல்லை யில்லை. அன்னந் தண்ணீர் அவன் அருந்தவில்லை.

ம:—அதோ கேளும்! துடியும் துடிக்கிறது. அவ்விரைவுக் குறிப்பு, தெய்வம் வந்துவிட்டதைத் தெரிவிக்கிறதோ. ஓடுவோம் வாரீர்.

என்று இருவரும் விரைந்தோடினார்கள். பரசுராமன் தலைவிரித் தாடிக்கொண்டிருக்க அவனெதிரில் ஓர் பெருங் குண்டத்தில் கற்பூரம் எரிக்கப்பட்டிருந்தது. காத்தன் தன் உடுக்கையெடுத் தடித்துப் பின் வருமாறு பாடிக்கொண்டிருந்தான்.

திக்கெலாம் புகழுந் திப்பிய சொரூபியே
பக்கத் துணையாய்ப் பாதுகா வம்மா!
மகிஷா சுரனை மடித்த மாதரீ

மகிழ்வுட னெம்பலி மாந்திடு மம்மா!
பாலகன் வருந்தலைப் பார்த்திலை யம்மநீ
காலன் கொள்ளாது காத்திருந் தேவியே!
வருந்தி யழைக்கிறேன் வண்ணமுகங் காணவே
விருந்து மிட்டேன் விரைவினில் வாராய்
கல்லோ வுன்மனம் காளியே யிரங்கலை
வல்லே வந்துன் வல்லமை காட்டாய்

(முறுவல் பூத்து நின்ற மதனகோபாலனையும் கருணாகரனையும் கண்டு)

கண்டா ரேசுவர் கலியார் நகைப்பர்
முண்டா மவர்தம் முகத்தினைச் சித்திரி
உதடு படைத்தவர் உதாசினஞ் சொல்லுவர்
பதடியர் பல்லைப் பிடுங்கிடுந் தாயே
உம்மை நம்பினோர்க் குண்டோ குறைகள்
எம்மைக் கைவிடா தாதரிப் பீரே
நாக்கினு லுன்சீர் நவிலவு முடியுமோ
வாக்கினால் தப்பா வரங்கொ டன்னையே.

என்று சொல்லிக் குண்டத்தின் தீயைப் பரசுராமன் முன் வைத்துச் சில கற்பூரத்துண்டுகளை அதனுள் இட்டுத் தீ மூட்டினான். இதற்குள் பரசுராமனும் அச்சமுறுத்து மூங்காரத்துடன்.

"இட்டகுண்ட மெதற்கடா? இம்மலைக்கென் கேடடா?
பட்டாலிற் படுமடா! பரிபவத்தோ டறியடா?
முட்டிநின்ற வொன்னலர் முதலுதிரங் கண்டவன்
பட்டமுட னன்பவன் பயமுடனீ ரேனடா!"

என்று பெருங்குரலில் பாடி மூர்ச்சையானான்.

அனைவரும் ஓடிச்சென்று, தண்ணீரைத் தெளித்து மூர்ச்சையைத் தெளிவிக்கமுயன்றனர். இராதாகிருஷ்ணன் சற்றே திகைத்தானேனும் விரைவில் தேறினவனாய், "நல்லது, நல்லது! நமக்கு நற்காலம் பிறந்துவிட்டது. நாம் சென்று பொருத இடங்களிலெல்லாம் பகைவர் உதிரத்தை முதலில் சிந்தியவர் நாமே! இவ்வமயம் இன்னொரு நற்செய்தியுமுண்டு. தெய்வம் மொழிந்த குறியை நிறைவேற்றிவைக்க, பலியேற்றுக் கொள்ளுமென்று, நமக்குத் தன்னையே வலுவில் கொடுப்பான்போல் அரசனது ஒற்றனொருவன், நமதுதேயத்தி னின்று புகுந்துள்ளான். அவன் நமது படையின் மிகுதியையும், படைக்கலன்களின் தொகுதியையும், மலைகளின் வழியையுங் கண்டுபோக வந்தவனாதலால் போரின் முறைப்படி யவனை நாம் கொல்லல் இழுக்காகாது. இன்று சாயந்திரம் அவன் ஊர் திரும்பிப் போகான். நாற்றிசையிலும் எனது ஆட்கள் காவல் காத்துநிற்கின்றனர். மீசி அவனுக்கு வழிகாட்டியாய் அமர்ந்து அவனைப் பிழைவழிகளில் நடத்தி அவனுக்காக வீரர் காத்திருக்கும் இடந்தனிற் கொணர்ந்துவிடுவான். அம்மன் சொன்ன குறியும் பலிக்கும்." என்று சொல்லி மகிழ்ந்தவனாய்ப் பின்னர்ச் சில பொன்னணிகளை யெடுத்துக் காத்தனிடம் கொடுக்கப்போனான்.

"இராதாகிருஷ்ண! என் நிலைமை யோராய் நீ. காசுக்கும் பொன்னுக்கும் உழைப்பவன் காத்தனோ? எனது உடம்பினைப் பாராய். இப்பூசை இனிது முடியுமாறு நான் செய்ததவ மென்னுடலை உடற்றிவிட்டது காண். நாவுலர, மயிர்க்குச்செறிய, கண்ணிடுங்க, யான் பட்ட கொடுமைகளை யார் படுவார்? எனதுயிர் இருந்த நிலையை எடுத்துச்சொல்ல இயலுமோ? யான் இன்றிரவு கண்ட தோற்றங்கள் மானிடர் காணத் தகுந்தவையோ? அவற்றை யுனக்கு யானெடுத்துரைப்பினும் இறவாமல் நீ கேட்டு நிற்பையோ? இவை யாவும் நான் மேற்கொண்டது என் தாய்க்குத் தலைவனவன்பொருட்டே யன்றி பொன்னின் பொருட்டன்று. நீ சுகமே வாழ்க!" என்று சொல்லி ஒரு நொடியில் அவ்விடம்நீங்கி மறைந்துவிட்டான். அவனுக்கு வணங்காமுடியுடைய இராதாகிருஷ்ணனும் வணங்கி வந்தனைவழிபாடு செய்து, அவனைச் சற்றே நோக்கியிருந்து பின்திரும்பி அருகில் நின்ற மதனகோபாலனைக்கண்டு, "நமது பகைவரைப்பற்றி என்ன அறிந்துவந்தாய்" என்று வினவினான்.

ம:—மாறனும் மற்றொரு பிரபுவும் படைதிரட்டி நிற்கின்றார்கள்.

இ:—நல்ல செய்தியே கொண்டுவந்தாய்! என்னையொத்த வீரரைக்காணவாவினால் என்னுள்ள மெழுகின்றது. இங்கே எப்போது வருவார்?

ம:—நாளைப்பகலே இவ்விடம் வருவார்களென நம்புகிறேன்

இ:—வரட்டும். அவர்களுக்கு நாம் நல்ல முகமன் அளிப்போம். நமது ஈரான் நாட்டுக் குடிகள் என்னவானார்கள். அவர்களைப்பற்றி ஏதேனும் அறிவாயோ?

ம:—அறியேன் அண்ணலே.

இ:—போகட்டும். அவரிருப்பின் நாமே முன்சென்றெதிர்க்கலாம், இல்லையேல் மாறன் இவ்விடம் வரட்டும். நாம் நமது பெண்களெதிரில், நமது வீடுகளையும் நிலங்களையும் காக்கவும், அவர் பொருட்டாகவும் சண்டையிடுவோம். தகப்பனுக்காகப் பிள்ளையும், தாய்க்காகத் தமையனும், கொடியிடை மனைவிக்காகக் கொழுநனும் போர்புரியட்டும். அந்தோ ஈதென் விந்தை! என் கண்களில் நீர் கலங்கி வீழ்கின்றனவே! எனதுள்ளம் நடுக்குறுகின்றதோ? இங்கே நிற்கும் மலைகளும் சலிக்குமேயொழிய எனதுள்ளம் சலிக்குமோ? அச்சமும் ஐயமும் குடிகொள்வ தென்னிடமோ! அனைவரும் அவரவர் இருப்பிடம் சென்று நின்மின்" எனக் கழறிய கட்டளையை யேந்திப் போர்வீரரனைவரும் பல பக்கம் சென்றனர்.

ம:—கேட்டேயோ குறியை?

க:—கேட்டேன். இருபொருள்படப் பேசியதே தெய்வம்.

ம:—மலைநாட்டிற்குக் கேடுண்டென்று கொள்வதா? அதற் கொருநாளுங் கேடில்லை யென்று கொள்வதா?

க:—பட்டாலிலே படுவது இராதாகிருஷ்ணனுக்கோ, பகைவருக்கோ?

ம:—அன்றி, ஸ்ரீபாலர் குடும்பத்திற்கோ?

க.—நாம் என்னென்று சொல்லமுடியும், காத்தனைத் தான் கேட்கவேண்டும். அவன் நம்மேல் சீறியதைக் கண்டீரோ?

ம:—அவன் கிடக்கட்டும். தலைவன் கதியென்ன? நமக்கு எது நேரிட்டால் என்" என்று பேசி ஏகினர்.

ரூ. 500 இனும்! எப்படி?
விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.
கே. எஸ். மூத்தையா கம்பனி,
தபாற்பெட்டி 99. சென்னை.

கவின் - அழகு. தோணி - அம்பு. உரும் - இடி. சேமம் - காவல். மேதி - எருமை. ஏறு - ஆண்எருமை. போத்து - ஆண்விலங்கு. உரிவை - தோல். சீகரம் - நீர்த்துளி. துடி - உடுக்கை. ஒன்னலர் - பகைவர்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் பாவும் துளக்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இக்காவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது விலை ரூ. 1-8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக்கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷூரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்துகொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, காரியதரிசி

மதராஸ் பிராஞ்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—

KALANILAYAM,

11, VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

கம்பர் கவித்திறம்

கலாநிலயத்தின் சார்பில் கூடிய மேவார் அவையின்கண் மார்ச்சு மாதம் 26ந் தேதி புதன்கிழமை மாலை 6 மணிக்குத் திருநெல்வேலி ஸ்ரீமான் T. K. சிதம்பரநாத முதலியார் B. A. B. L. M. L. C. அவர்கள் கம்பர் கவித்திறம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு கட்டுரை நிகழ்த்தினர். அதன் சுருக்கம் வருமாறு:—

'கம்பரது காவியத்தின் நலத்தைச் சொற்கொண்டு செப்புதல் இயலாததொன்றாகும். அதைக் கற்று அனுபவிப்போரே கலையின் நிறைவை அறியலாவர்' என்னு முன்னுரைகூறி யுத்த காண்டத்தில் கும்பகர்ணன், இலக்குவனுடன் பொருவதன் முன்னர், பேசிய வீரமொழியையும், அவனதற்கு இளைய வீரன் எதிருரைத்த சிறப்பையும், பகர்கின்ற கவிகளைப்பாடிய முதலியாரவர்கள் அவையிருந்தோரொடு தாமும் அதனை அனுபவித்த இனிமையைக் கேட்டோரே அறிவர்.

அன்னைசொற் கிணங்கிப் பரதனுக்கு நாடீந்து அண்ணன் காடுசெல்ல நேர்ந்த செய்தியை அறிந்து வெகுண்டானுந் தன் வில்லொடு

'புவிப்பாவை பரங்கெடப்போருவந்தோரையெல்லாம்
அவிப்பானும் அவித்தவராக்கையைப் பண்டமுற்றக்
குவிப்பானும் எனக்கொருகோவினைக் கொற்றமௌலி
கவிப்பானும் நின்றேனிது காக்குநர் காமின்'

என்று வெளிவந்த இலக்குமணனைக் கையமர்த்திக் காகுத்தன்,

'நதியின் பிழையன்று நறும்புனலின்மை, அற்றே
பதியின்பிழையன்று, பயந்து நம்மைப் புரந்தாள்
மதியின் பிழையன்று, மகன்பிழையன்று, மைந்த!
விதியின் பிழை நீயிதற் கென்னை வெகுண்டது'

என்று சினந்தணிக்க முயன்றதையும், எனினும் அம்முயற்சி சினத்தைத் தணிப்பதற்குப்பதிலாய், இளையவன் உள்ளத்தெரியும் சினத்தீ வளர்ப்பதற்கான காற்றாயமைந்ததை,

'உதிக்கும் உலையுள்ளுறு தீயென ஊதைபொங்கக்
கொதிக்கும் மனம் எங்ஙனம் ஆற்றுவேன் கோளி
[ழைத்தாள்
மதிக்கும் மதியாய் முதல்வானவர்க்கும் வலியதாம்
விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்டி'

என்ற பாசுரத்தால் காட்டியும், தந்தார் ஸ்ரீமான் முதலியார். இவ்வண்ணம் அண்ணன்மேலுள்ள காதலால் வெகுண்டானை, 'வாய்தந்தன கூறுதியோ மறைதந்த நாவால், தாய்தந்தைபர்பால் சலித்தல் கூடுமோ' என்று பெரியவன் கூறலும், அம் மாற்றத்தின் பெருமை இலக்குவனுக்குத் தமையன்பாற் காதலையும், அவனைக் காடுதூத்துபவர்பால் கோபத்தையும் வளர்த்ததை

'நற்றாதையும்நீ தனிநாயகனும்நீ வயிற்றில்
பெற்றாயும் நீயே, பிறரில்லை பிறர்க்குநல்கக்
கற்றாயும்நீ !'

என்ற பாசுரத்தால் கூறிக் கம்பர்பிரான் பாத்திரங்களின் வளர்ச்சியும் அவர் பயிலும் சொற்கள் வளர்கின்ற நெறியையும் விளக்கி, கார்லைல், பிராட்லி போன்ற அறிஞர் வகுத்த இலக்கணம் கடவாது கம்பர் சித்தரிக்கும் சிறப்பினையும் எடுத்துக் காட்டினர். பின் கம்பரது கவித்திறம் தெரிய விரும்புவார் அதைப் படித்து அனுபவித்தல் வேண்டுமென்றும் கலையின்பம் நுகரார் வாழ்வு குறைவுடையதென்றும் கூறினர்.

இவ்வவைக்குத் தலைவராய் நேர்ந்த ஸ்ரீமான் பவானந்தம் பிள்ளையவர்கள் தமிழின் அருமையைத் தக்கபடி கூறி ஸ்ரீமான் முதலியாரவர்களது திறமையைப் பாராட்டினர்.

வர்த்தமானம்

சட்ட இலாக்காச்செய்தி:—சென்னை கவர்னர் கவுன்ஸிலின் அங்கத்தினரான ஸர். மகமத் ஹபீப்மான் சாகிப்பின் உத்தியோககாலம் ஒரு வருடம் நீடிக்குமாறு அரசர்பெருமான் அங்கீகாரம் செய்துள்ளார் என்று சட்ட இலாக்கா அறிக்கை மூலம் தெரிகின்றது.

சுகாதார முயற்சி:—சென்னையில் காலரா அம்மை முதலிய தொத்து நோய்கள் பரவிவருவதால் சென்னை நகரசபையார் சுகாதாரப் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்து வருகின்றனர். சென்னைக் கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களிலும் சேரிகளிலும் மாஜிக்லாண்டன் மூலம் சுகாதாரப் பிரசாரம் செய்விக்கச் சுகாதார அதிகாரிகள் முயலுவர்.

உப்பு சத்தியாக்கிரஹகம்:—காந்தி அடிகள் இம்மாதம் 5-ந்தேதி யன்று டாண்டி என்னும் இடம் போய்ச்சேருவர் என்றும், இதுவரை ஆயிரக்கணக்கில் தொண்டர்கள் சேர்ந்துளர் என்றும், காந்தி ஆசிரமத்தில் பெண் தொண்டர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர் என்றும், கர்னாடகமும், ஆந்திர நாடும், வங்காளமும் சத்தியாக்கிரஹத்திற்குத் தயாராகி வருகின்றவென்றும், தெரிகின்றது

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்தன இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கம் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!! 60-நாளில் இங்கிலீஷ் கற்க அநேக பாடங்களுடன் முன் பதிப்புகளைவிட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்தது. இதுவரை 58100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எந்நூலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவர். இதில் 1-அணா முதல் 8000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்தது. 800-பக்கம். அழகிய சிமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

8ப2, தங்கசாலை வீதி, மதராஸ்.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்:—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 61.
2. கம்ப ராமாயணம்:— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 61.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், உடன்போக்கு பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை:—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவை களினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி:—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 61 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம்:—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 62 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம்:—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிட்டாகரஸ், எபிகுயூரஸ், ஜீனோ, பைரோ, அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆகியோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், காலடி காணாற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல விஷயங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியோர் நாம், உரிமையின் பொருமை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்ற அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளைகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆராய்ச்சி 8, கல்சவைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம்:—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் வெளவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. மொங்கதத்திளவரசன்:—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம்:—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேசிய புகழ் முதலிய சிறப்புப்படலங்கள் 6, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய் மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பயிண்டு செய்யாதது	8	0	0	பயிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்…

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. K. …